பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 21 திங்கட்கிழமை (04-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:190

'வர்ணக் கதிர்' என்ற பெயரில் நடவடிக்கை

# புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதைத் தடுக்க

# கிழக்குக் கடலில் நிரந்தர முற்றுகை வியூகம்

## விமானப்படையுடன் இணைந்து கடற்படையினர் ஆரம்பித்தனர்

கொழும்பு,ஜூன்4

**விடுதலைப் புலிகளுக்கு கடல்வழியாக ஆயுதத் தளபாடங்கள் வந்து சேருவதைத் தடுப்பதற்காக விமானப் படையுடன் இணைந்து கிழக்குக் கடலில் 'வர்ணக் கதிர்' ('வருண கிரண') என்ற பெயரில் நிரந்தர கடல் முற்றுகை நடவடிக்கை ஒன்றை கடற்படையினர் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.**

புலிகள் யுத்தநிறுத்தம் அறிவித்திருந்த நான்கு மாத காலப்பகுதியில் அவர்களுக்கு மாதத்துக்கு இரண்டு கப்பல் என்ற கணக்கில் ஆயுதங்கள் வந்து குவிந்திருப்பது பற்றிய தகவல்கள் இப்போது வெளியாகி உள்ளன.

பெரிய கப்பல்களில் ஏற்றிவரப்படும் ஆயுததளபாடங்களை கரையிலிருந்து சுமார் நூறு முதல் நூற்றியைம்பது மைல் தொலைவில் வைத்து சிறிய படகுகளுக்கு மாற்றி, அவற்றை தமது தளத்துக்குப் புலிகள் கொண்டு வந்து சேர்ப்பதாக புலனாய்வுத் தகவல்கள் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளன.

புலிகளின் இந்த முயற்சியை முறியடித்துத் தடுக்கும் நோக்குடன், வடகிழக்கு கரையோரத்திலிருந்து ஆறு மைல் தொலைவு தொடக்கம், முல்லைத் தீவுக்கடலை முற்றிலும் உள்ளடக்கி, தெற்கே கொக்கிளாய் வரையான கடற் பிரதேசத்தில் இந்த முற்றுகை வியூகம் வகுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

திருகோணமலையில் அமைந்துள்ள - இலங்கைக் கடற்படையின் கிழக்கு கட்டளைத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இந்தப் படை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இக் கடற்பகுதியில் கடற்படையினர் தமது நகர்வுகளை அதிகரித்துள்ளதுடன், இந்தியாவிலிருந்து அண்மையில் பெறப்பட்ட பாரிய யுத்தக் கப்பல், இஸ்ரேலிடமிருந்து பெறப்பட்ட அதிவேக தாக்குதல் படகுகள் உட்பட தனது பலத்தின் கணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பல முனைகளில் தாக்க புலிகள் தயாராகின்றனர்?

### புலனாய்வு அறிக்கைகள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன்4

பல முனைகளில் பெரும் தாக்குதல்களை நடத்துவதற்குப் புலிகள் தயாராகி வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன என்று இராணுவ ஆய்வாளர் இகபால் அத்தாஸ் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

"தடை நீக்கும் விடயத்தில் அரசு கடும்போக்கைத் தொடர்ந்தும் கைக்கொண்டு அதற்கு மறுத்து வருமானால், சமாதான முயற்சிகள் முற்றாகச் செயலிழந்து போய் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு அதுவே பொறுப்பேற்க வேண்டி வரும் என்பதை அது மனதில் கொள்ள வேண்டும்" - என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வரப்போகின்ற நிகழ்வுகளுக்கு புலிகள் விடுக்கும் எச்சரிக்கையா இது?

உயர்மட்டப் புலனாய்வு அதிகாரிகள் அப்படித்தான் யோசிக்கின்றார்கள்.

வடக்கில் - குறிப்பாக பூநகரி, நாகர்கோயில் பிரதேசங்களில் - புலிகள் தமது அணிகளைக் குவித்து வருவது பற்றிய சமிக்ஞைகள் கிடைத்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதேசமயம் -

கிழக்கில் மூன்று மாவட்டங்களில் புலிகள் மேற்கொள்ளவிருக்கும் தாக்குதல் திட்டங்கள் பற்றிய விடயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றைப் பொலீஸ் தலைமையகம் பொலீஸ உள்சுற்று வட்டத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**திருமலைப் பிரிவில்**

*திருகோணமலைப் பிரதேசத்தில் உள்ள கடற்படை மற்றும் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்காகப் பெருந்தொகையான ஆயுதத் தளபாடங்கள் மற்றும் வெடிமருந்துகளுடன் புலிகளின் விசேட குழு ஒன்றை புலிகளின் ஆயுதங்களுக்குப் பொறுப்பானவரான*

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சியில் முட்டுக்கட்டை நிலையைப் போக்க

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு ஆறு வெளிநாடுகள் அரசுக்கு அழுத்தம்

கொழும்பு,ஜூன்4

சமாதான முயற்சியில் தற்போது ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையை நீக்குவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையைத தற்காலிகமாகவேனும் இடைநிறுத்தி வைக்குமாறு மேற்கு நாடுகள் பலவும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கி இருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையின் தாற்பரியங்களை நன்கு உணர்ந்து கொண்டுள்ள ஆறு நாடுகள் இது விடயத்தில் "அரசைப் பக்குவமாக இணங்க வைக்கும்" முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தடையை நீக்கிவிட்டு, பின்னர் அவசியத்தைப் பொறுத்து அதை நீடிக்கவோ நிறுத்தவோ கூடியதான வகையில் அரசை இணங்கச் செய்வதற்கான கூட்டு முயற்சியில் சம்பந்தப்பட்ட ஆறு நாடுகளும் ஈடுபட்டிருப்பதாக ராஜதந்திரி ஒருவர் கூறியதாக அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

'புலிகள் மீதான தடையை நீடித்துச் செல்வதோ, வெளிநாடுகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### படை அதிகாரிகள் சகிதம்

## அமைச்சர் டக்ளஸ் நேற்று தென்மராட்சிக்கு விஜயம்

### எழுதுமட்டுவாழ் வரை சென்று பார்த்தாராம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று படை அதிகாரிகள் சகிதம் தென்மராட்சியின் பல இடங்களுக்கும் விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் எழுதுமட்டுவாழ் வரை சென்று அங்குள்ள படையினரின் முன்னரங்க நிலைகளையும் பார்வையிட்டதாக ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சருடன் யாழ்.படைகளின் துணைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரபால, 52 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் சமன் குலதுங்க ஆகியோரும் உடன் சென்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை – கொழும்பு வீதியின் பாதுகாப்பு படையினர் வசம்!

### பொலீஸாரிடமிருந்து பொறுப்புமாற்றம்

கொழும்பு,ஜூன்4

கிழக்கு மாகாணத்தில் உள்ள கடற்படையினரின் பிரதான விநியோகப் பாதையான திருமலை - கொழும்பு நெடுஞ்சாலையைப் பாதுகாக்கும் பொறுப்பு பொலீஸாரிடமிருந்து மீளப் பெறப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கடற்படையின் வாகனப் போக்குவரத்தை இலக்குவைத்து இந்தப் பாதையில் புலிகள் வெற்றிகரமான பல தாக்குதல்களை நடத்திவருவதையடுத்தே இந்தப் பொறுப்பு மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலை - கொழும்பு வீதியில் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்று சுமார் ஒன்றரை மாத காலத்துக்கு முன்னர் பொலீஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த போதும் கடந்த மாத இறுதியில் இந்த வீதியில் கடற்படை வாகனம் ஒன்றின் மீது புலிகள் கிளைமோர் கொண்டு நடத்திய தாக்குதலைத் தடுக்கப் பொலீஸார் தவறிவிட்டனர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சுங்க அனுமதி பெறாமல்

## 25 சொகுசு கார்கள் இறக்குமதி

### விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஜூன்4

பலகோடி ரூபா பெறுமதியான 25 ஆடம்பரக்கார்கள் சுங்க அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்டிருப்பது தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி பொலீஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் இந்தக் கார்கள் கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் -

ஆனால் அது குறித்து சுங்கப் பகுதியினருக்கு எதுவும் தெரியாது என்றும் - கூறப்படுகிறது.

இதேவேளை -

இந்தக் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டதில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் அமைச்சர் ஒருவர் நேற்று இரகசியப் பொலீஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் -

இந்த வாகன இறக்குமதியில் கொழும்பில் உள்ள பெரும் வர்த்தகப் புள்ளி ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாகவும் -

செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கை நிலைமை குறித்து அத்வானியுடன் ரணில் பேச்சு

புதுடில்லி,ஜூன்4

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நோர்வே உதவியுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள், தமது அமைப்பு மீதான தடையை நீக்குமாறு புலிகள் விடுத்திருக்கும் கோரிக்கை, அதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலை என்பன தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க அத்வானிக்கு விளக்கிக் கூறியதாக இந்திய இணையச் செய்திகள் தெரிவித்தன.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கொழும்பு செல்லும் மலையகத்தவர் விவரங்களைப் பதிவு செய்யவேண்டும்

## பாதுகாப்புக் கருதி பொலீஸார் முன்னெச்சரிக்கை!

கொழும்பு,ஜூன்4

மலையகத்திலிருந்து கொழும்புக்குத் தொழிலுக்காக வருபவர்கள் தோட்ட அதிகாரிகளுக்கும், கிராம சேவை அலுவலர்களுக்கும் அறிவித்து விட்டு வரவேண்டும் என்று நுவரெலியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரி.பி.நிகால் சமரக்கோன் அறிவிததுள்ளார். மலையகத்தின் பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நுவரெலியா பொலீஸ் தலைமையகத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலேயே பொலீஸ அத்தியட்சகர் இதனை அறிவித்துள்ளார்.

பொலீஸ் உயர் அதிகாரிகள் நுவரெலியா மாவட்டத்தின் தோட்டக் கம்பனிப் பணிப்பாளர்கள், தோட்ட மேற்பார்வையாளர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மலையகத்தின் பாதுகாப்புக் கருதி தோட்ட மேற்பார்வையாளர்கள் அவதானமாகச் செயற்படவேண்டும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து மலையகத்துக்கு வருபவர்கள் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும். தோட்டத்துக்குச் சம்பளம் எடுத்துச் செல்லும் போது உரிய பொலீஸ் பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளவேண்டும். விசேடமாக மலையகத்திலிருந்து கொழும்புக்குச் செல்பவர்கள் பற்றிய ஒரு பதிவை அதிகாரிகள் வைத்திருக்க வேண்டும். கொழும்புக்குத் தொழிலுக்குச் செல்பவர்கள் தோட்டத்துக்கும் கிராம சேவையாளர்களுக்கும் அறிவித்துச் செல்லவேண்டும்.

கொழும்பில் தொழில் புரியும் சிலர் காணாமற் போகின்றனர். பலர் காயங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் எங்கு என்ன செய்கின்றார்கள் என்பது தெரிவதில்லை. எனவே, அவர்கள் கொழும்பில் எங்கு என்ன தொழில் புரிகிறார்கள் என்பது பற்றி அறிவிக்க வேண்டும் என்றும் நுவரெலியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரி.பி.நிகால் சமரக் கோன் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து தோட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஐ)

# கல்முனை கரையோர மாவட்டம் பற்றி ஜனாதிபதியுடன் பேசிய பின்பே முடிவு

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சொல்கிறார்

கொழும்பு,ஜூன்4

கல்முனை கரையோர மாவட்டம் அமைப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்திய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துத் தீமானிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கல்முனை கரையோர மாவட்டத்தினை அமைப்பது தொடர்பான திட்டத்தினை கடந்த 31 திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். குறித்த கால அவகாசம் முடிவடைந்து விட்டமையினால் முஸலிம் காங்கிரஸ் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என அமைச்சரிடம் கேட்டபோதே அமைசசர் மேற்கண்டவாறு கூறினார்.

வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நான் தற்போதுதான் கொழும்பு திரும்பியுள்ளேன். கல்முனை கரையோர மாவட்டம் அமைபபது தொடர்பான விடயம் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்த வேண்டும். இப்பேச்சுவார்த்தைக்குப் பின்னரே எத்தகைய முடிவை எடுப்பது என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஹக்கீம் வெள்ளிக்கிழமை மாலையே கொழும்பு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

# மின் விநியோகப் பணிக்கு என ஊர்காவற்றுறைக்கு நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்4

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகம் மேற்கொள்வதற்கென வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பத்து லடசம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா ஊடாக ஊர்காவற்றுறையில் உள்ள பொது அமைப்புக்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சர் இந்த நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளார்.

மின் விநியோகத் திட்டத்தினை விரைவில் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் யாவும் ஊர்காவற்றுறைப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஊர்காற்றுறைப் பிரதேச சபைத்தலைவர் ந.மதனராஜா தெரிவித்தார்.

ஏற்கனவே ஊர்காவற்றுறை பிரதேச சபை நிதியிலிருந்து நாலரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்ப வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## யாழ். நிலைமைகள் குறித்து

# மனித நேய அமைப்புகள் நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.மாவட்டத்தின் இன்றைய நிலை தொடர்பாக ஆராயும் பொருட்டு கோயில் வீதியில் உள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் குடிசன மதிப்பீடு, சமாதான நிலையை உருவாக்குவதற்கான செயற்பாடுகள், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கென தனியான அமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள மனித நேய அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், மத நிறுவனங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5-9)

## பல்லாயிரக் கணக்கானோர் கதறியழ

# மன்னர் மற்றும் குடும்பத்தவரின் சடலங்கள் தீயுடன் சங்கமம்

காத்மண்டு,ஜூன்4

மறைந்த நேபாள மன்னர் பிரேந்திராவின் பூதவுடல் - அவரது வயதைக் குறிக்கும் வகையில் 56 பீரங்கிக் குண்டுகள் முழங்க பாஸ்மதி நதிக்கரையில் நேற்று முன்தினம் மாலை தீயுடன் சங்கமமானது.

மறைந்த ராணி ஐஸ்வர்யா, இளவரசி ஸ்ருதி, இளவரசர் நிரஜன் ஆகியோரது உடல்களும் மன்னரின் உடலுக்கு அருகிலேயே தகனம் செய்யப்பட்டன.

மன்னர் குடும்பத்தவரின் உடல்கள் தகனம் செய்யப்பட்ட இடத்திலிருந்து நூறு மீற்றர்தொலைவில் உள்ள மற்றொரு இடத்தில் மன்னரின் சகோதரிகள் உட்பட இறந்த ஏனைய உறவினர்களின் சடலங்கள் தகனஞ் செய்யப்பட்டன.



மன்னரின் மறைவுத் துயரால் கண்ணீர் சிந்தும் காத்மண்டு நகரவாசிகள் மன்னரதும் மகாராணியினதும் படங்களைத் தாங்கியவாறு காணப்படுகின்றனர்.

தகனக் கிரியைகள் நடைபெற்ற போது நேபாள தேசிய கீதமும், இறுதி இசையும் இசைக்கப்பட்டசமயம் அங்கு நிலவிய சோகத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை என்று வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக இராணுவ மருத்துவமனையில் இருந்து நேபாள அரச குடும்பத்தவரின் குலதெய்வக் கோயிலான பசுபதிநாதர் ஆலயத்தின் அருகே பாஸ்மதி நதிகரை வரை சடலங்கள் சுமார் 8 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன.

அப்போது வீதிகளின் இரு புறங்களிலும் திரண்டிருந்த சுமார் 10 லட்சம் நேபாளியர்கள், அரச குடும்பத்தவரின் உடல்களைப் பார்த்து கணணீர் விட்டுக் கதறியழுதனர்.

அரச குடும்பத்தினரின் இறுதிச் சடங்குகளில் வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்வதை நேபாளம் வி[illegible] தலைவர்கள் [illegible] தூதரகங்களில் தமது அஞ்சலிக் குறிப்புக்களைப் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-ஓ)


# கல்விச்சாலைக் காட்சிகள்




வயாவிளான் மத்திய மகாவித்தியாலய தமிழ் மன்றம் ஏற்பாடு செய்திருந்த வள்ளுவர் விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். *(படம்:புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*



காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயமும், பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும் இணைந்து நடத்திய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ.இராதகிருஷ்ணன், பாடசாலை அதிபர் ஆ.பாலகிருஷ்ணன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், கௌரவ விருந்தினர் ச.ஞானப்பிரகாசம் (கணக்காளர் - லண்டன்) ஆகியோர் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதை படத்தில் காணலாம். (க-73)



நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் அண்மையில் சாரணர் இயக்க ஆரம்ப விழா நடைபெற்றது.

நாவாந்துறைப் பங்குத்தந்தை அருட்திரு. பீற்றர் துரைரெட்ணம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். பாடசாலை அதிபரும், சாரண மாவட்ட உதவி ஆணையாளருமான க.செபஸ்தியாம்பிள்ளை, உப அதிபர் என்.நகுலநாதன், சாரண மாவட்ட உதவி ஆணையாளர் (பயிற்சி) எஸ்.தேவரஞ்சன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (க-7)



நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற மேலதிக காணிப்பதிவாளர் கு.கயிலாயபதி மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ஜே.விஜயரட்ணம், பாடசாலை அதிபர் க.சண்முகலிங்கம், ஆசிரியர் ஐயாத்துரை குமாரதாஸன் ஆகியோர் காணப்படுகின்றனர். (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அந்த "வைரஸ்" இருக்கும் வரை....!

சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தாமும் தமது அரசும் கொண்டுள்ள அக்கறையிலும் ஈடுபாட்டிலும் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் –

போரை நிறுத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் -

கடந்த மாத இறுதியில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளில் தாம் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் அப்போது சொன்னார்.

அவ்வாறு தெரிவித்த மூன்று நாள்களில் -

பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்துகொண்டாலும் சரி, கலந்துகொள்ளாவிட்டாலும் சரி, இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கம்பளையில் நடைபெற்ற அடிக்கல் நடும் விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார் சந்திரிகா.

அதாவது, ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்கான "தீர்வு" ஒன்றை முடிவு செய்து, அதனை அரசமைப்பில் சேர்த்து நிறைவேற்றுவது ஜனாதிபதியின் மாற்றுத் திட்டம் என்பது நன்றாக விளங்குகிறது.

இதற்கு முன்னரும் இந்தக் கருத்தை மறைமுகமாகப் பிரதிபலித்துப் பேசியுள்ளார் அவர். விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளமுடியாத பட்சத்தில் இந்த மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்ப்பது ஜனாதிபதியின் நோக்கம் எனலாம்.

எந்தத் தீர்வைக் கொண்டு வந்தாலும், இப்போதைய நாடாளுமன்றத்தில் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவும் ஒத்துழைப்பும் அதற்கு அத்தியாவசியம்.

பொதுத் தேர்தலில் "கோட்டை விட்ட" ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து ஆட்சிப்பீடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஒரு நப்பாசை. அந்த ஆசையை நிறைவேற்ற சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளின் ஆதரவை நாடி நிற்கிறது அந்தக் கட்சி.

இத்தகைய பின்னணியில் தேசிய அரசு என்ற எலும்புத்துண்டு ஒன்றை எடுத்து வீசியிருக்கிறது அரசாங்கம். அதன் துணை கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை வளைத்துப் பிடிக்கலாம் - வலைக்குள் போடலாம் - என்பது அரசின் நம்பிக்கை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரும் திட்டத்தை முறியடிக்க "தேசிய அரசை" விடச் சிறந்த மார்க்கம் எதுவும் இல்லை என்பதும் ஆளுந்தரப்பாரின் கணக்கு.

தேசிய அரசாக இருந்து கொண்டும் சரி, தனிக்கட்சி அரசாக இருந்துகொண்டும் சரி, விடுதலைப் புலிகளைத் தவிர்த்துக் கொண்டு வரும் எந்தத் தீர்வும் போரை நிறுத்த உதவாது என்பது ஏற்கனவே இலங்கை அரசுகள் கண்ட அனுபவம்.

ஏன்? 1995 ஏப்ரலுக்குப் பின்னர் "சமாதானத்துக்கான போர்" ஒன்றை நடத்திய போதிலும் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளைத் தவிர்த்துத் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவது நடைமுறைச் சாத்தியமற்றது என்ற அனுபவத்திலேயே சந்திரிகாவும் சமாதானப்பேச்சு வழிக்குத் திரும்பினார்.

ஆனால், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, புலிகளைத் தவிர்த்து அரசியல் தீர்வு காண்பதற்கு மாற்றுத் திட்டமிடுகிறார் இப்போது!

சணம் பித்தம் சணம் வாதம் என்ற இந்த தடுமாற்ற வியாதிக்குக் காரணமாக ஓர் அரசியல் "வைரஸ்" உண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற கோஷத்தை முன்னெடுத்தும் தீவிரப்படுத்தியும் பதவிக் காலத்தைக் குறைவின்றிக் கழிக்க வேண்டும் என்ற இலக்கே அந்த "வைரஸ்"!

# அமைச்சரவைப் பாதுகாப்பு அதிகாரி தலைமையில் கொள்ளைக் கோஷ்டி!

## பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 26 வங்கிகள் உட்பட பல கொள்ளைச சம்பவங்களில் ஈடுபட்ட அமைச்சரவைப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தலைமையிலான பத்துப் பேரைக் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பயங்கரவாதத் புலனாய்வுப் பிரிவினர் (ரி.ஐ.டி.) கைது செய்துள்ளனர்.

ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பணம், நகைகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களை இவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இதில் ஒரு கோடி ரூபா பெறுமதியான பணம், நகைகள் மற்றும் பொருள்கள இவர்களிடமிருந்து பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவைச சேர்ந்த (எம்.எஸ்.டி.) அதிகாரி ஒருவர் தலைமையிலான இந்தக் கொள்ளைக் கோஷ்டியில், விமானப் படை மற்றும் இராணுவத்திலிருந்து தப்பியோடிய நால்வரும் மற்றும் ஐவரும் அடங்கியுள்ளனர்.

இவர்களைக் கைது செய்த ரி.ஐ.டி. பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் இது பற்றிக் கூறுகையில்:

இந்தக் கோஷ்டியினர் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி கடவத்தை ஹட்டன் நஷனல் வங்கியில் 19 லட்சத்து 33 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துள்ளனர்.

இதைவிட கொட்டாவ ஹட்டன் நஷனல் வங்கி, நீர்கொழும்பு சம்பத் வங்கி, மரதகமுல்ல ஹட்டன் நஷனல் வங்கிகளில் பல லட்சம் ரூபாவையும், இதைவிட 22 வங்கிகளிலும் கொள்ளையடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து ரி.56 ரகதுப்பாக்கிகள், 9 மி.மீ.தன்னியக்க பிஸ்ரல்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒப்பரேஷனல் அக்ஷன் பிளான் என்ற நடவடிக்கையின் மூலமே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். (க)

### அணைக்கட்டு சிதைவுறும் அபாயம்

கடல்நீர் உட்புகாதவாறு கோப்பாய் தரவைப் பகுதியில் கட்டப்பட்ட நீண்ட அணைக்கட்டில் உள்ள மரங்களை விறகு வியாபாரிகள் தறித்து வருகின்றனர். இதனால் அந்த அணை சிதைவுற்று அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 1998ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த அணைக்கட்டை மழை நீர் அரித்துச் செல்லாமல் இருப்பதற்காக உவர்நீர் செறிவில் வளரக் கூடிய மரங்கள் நடப்பட்டிருந்தன. (க-72)

# நாட்டு நடப்பு

செத்துவிட்டாள் முத்தம்மா குடலொட்டி
செய்தார்கள் "எம்பாம்" அயலார் கூடி
பெத்தம்மாவுக்குக் கொள்ளி என்றெழுதி
முழுதாக சந்தனக்கட்டை எடுத்து
அத்தர் புனுகு திருநீறு பூசி
அதை அழகாய்ப் பொதி பண்ணி
மூத்த மகன் அனுப்பினான் பாஸல்
மூன்று மணிக்கு வந்தது பிளேனில்

*- விகடகவி -*

# தமிழரின் துயரங்களைச் சித்திரிக்கும் திரைப்படம் தயாரித்த பௌத்த பிக்குவுக்கு கொலைமிரட்டல்!

## பேரினவாத அமைப்பின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு

வடக்கு, கிழக்கில் இருந்து கொழும்பு வரும் தமிழ் மக்கள் படும் துன்பங்களைச் சித்திரிக்கும் குறுந்திரைப்படம் ஒன்றை எடுக்க முயன்ற இளம் பட்டதாரி பௌத்த பிக்கு ஒருவரை அப்படத்தை எடுக்க வேண்டாமெனக் கோரி பேரினவாத அமைப்பு ஒன்று கொலைமிரட்டல் விடுத்துள்ளது.

இனவாத நோக்கற்ற மனித நேய சிந்தனையாளரான மஹகனுமுல்லே வஜிர தேரோ என்ற இப்பௌத்த பிக்கு இப்போது தான் தொடர்ந்தும் அக்கும்பலினால் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் தான் எப்படியும் அப்படத்தை முடித்து வெளியிட முயன்ற போதும் மேற்படி கும்பல் அதனைத் தடுத்து வருவதாகவும் கூறினார். இனவெறியர்களின் பாஸிஸவாதம் மூலம் சுதந்திரமாகச் சிந்திக்கும் கலைஞனின் சிந்தனை ஒடுக்கப்படுகிறது என்றும் -

தமிழ் மக்களின் துன்பத்தை வெளிப்படுத்தும் படத்தைத் தயாரித்ததற்காகத் தன்னை விடுதலைப் புலிகளின் உளவாளியென அவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

2.4.2001 அன்று தேரோவினால் எழுதப்பட்ட "முடியாத கதையொன்று" (Unfinished Story) என்ற குறுந்திரைப்படத்தை படப்பிடிப்பு செய்து கொண்டிருந்த போது பேரினவாதக் கட்சியுடன் தொடர்புடைய பெரும் எண்ணிக்கையான மாணவர் குழுவொன்றுடன் வந்து படப்பிடிப்பை பலவந்தமாக நிறுத்தச் செய்தததுடன இனியும் இதனைத் தொடரக்கூடாதென அச்சுறுத்தல் விடுத்தனர். அத்துடன் மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

இந்தக் குறுந்திரைப்படம், கிழக்கில் இருந்து கொழும்புப் பல்கலைக் கழகத்திற்குவரும் ஒரு தமிழ் இளைஞனின் எதிர்பார்ப்புக்கள் மிக மோசமான இனவாத சூழ்நிலையால் சிதைக்கப்பட்டு பல்கலைக்கழக விடுதியில் இருந்தும் அவன் வெளியேறும் சூழ்நிலையை வெளிக்காட்டும் கதையம்சத்தைக் கொண்டதாகும்.

கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் இங்கு அனுபவிக்கும் துன்பகரமான நிலைமையின் தாக்கத்தை மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கத்திலேயே இக்குறுந்திரைப்படத்தைத தான் தயாரித்ததாக அதன் இயக்குநர் மஹகனுமுல்லே வஜிர தேரோ தெரிவித்தார்.

இதன் இயக்குநரான வஜிர தேரோ அண்மையில் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய சிறந்த கவிஞரும், பாடலாசிரியரும் திரைப்பட நெறியாள்கையாளருமாவார். அவரது "தென்பத் விகாரே" என்ற ரெலி சினிமா நாடகத்திற்கு ஆசிய நெறியாள்கை விருதும் கிடைத்திருந்தது. இந்தக் குறுந்திரைப்படம் அவரது முதலாவது படைப்பாகும்.

இலங்கையின் சிறுபான்மை இன மக்களுக்கும் சம உரிமை கிடைக்க வேண்டுமென நீண்டகாலமாக இவர் கூறிவருவதால், பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் அவர் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

மேற்படி குறுந்திரைப்படம் நிறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இப்போதே பலமான எதிர்ப்புக்கள் எழுந்துள்ளதுடன் அந்த நடவடிக்கைக்கு எதிராக மறியல் போராட்டம் செய்ய கலைஞர்களும் மனித உரிமைகாப்பாளர்களும் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தத் திரைப்படத்தை நிறைவு செய்து வெளியிடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது கலைஞர்களின் கடமையாகும் .என பிரபல சினிமா இயக்குநர் தர்மசிறி பண்டார நாயக்க அறிவித்துள்ளார். (க)

### பாலர் பாடசாலை விளையாட்டு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பாலர் பாடசாலையின் 26ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆசிரியை திருமதி சோமசுந்தரக் குருக்கள் நாகபூசணி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-7)

# சமாதான நடவடிக்கைகளுக்கு முரணாக படையினர் செயற்படமாட்டார்கள்

## இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கருணாரத்ன அறிவிப்பு

கொழும்பு,ஜூன்4

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முரணான செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதென பாதுகாப்புப் படைத் தலைமை அதிகாரிகள் தீர்மானித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் எதிர்காலதத்தில் மேற்கொள்ள முனையும் நடவடிககைகள் குறித்து அவதானமாக இருப்பதுடன், மீண்டும் முன்னைய சம்பவங்கள் இடம்பெற இடமளிக்க வேண்டாமெனவும் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இது முன்வைத்த காலை பின்னெடுக்கும் செயற்பாடு அல்ல என்றும், சமாதானத்தை ஏற்படுத்து முகமாக விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கான நடவடிக்கையே என்றும் இராணுவ அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடாபாக அரசாங்கம் எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்வதெனவும் இராணுவ உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்றில் படைத் தலைமை அதிகாரிகள் இணக்கம் கண்டுள்ளனர்.

இதேவேளை, புலிகள் இயக்கம் ஆயுதங்கள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக வடக்கு, கிழக்குக் கடற் பிரதேசத்தில் கடற்படையினர் தொடர்ந்தும் தமது பணிகளைச் செய்து வருவர்.

வடக்கு-கிழக்கு மக்களின் சிவில பாதுகாப்பை உறுதிப்படுத்த படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவர். (க)

# சுகாதார வாரத்தையொட்டி புலோலியில் இலவசக் கண்காட்சி

## சிகிச்சை முகாம் நடத்தவும் ஏற்பாடு

பருத்தித்துறை மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் சுகாதார வார நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக யாழ்.மாவட்ட சுகாதார உதவிப்பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரத்தினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த சுகாதார வார நிகழ்வின் போது இலவச கண்காட்சியும் லயன்ஸ் கழகத்தின் ஒத்துழைப்புடன் இலவச சிகிச்சை முகாமும் இடம்பெறவுள்ளது.

சிகிச்சை முகாமில் சலரோகம், இரத்த அழுத்தம், பற்சிகிச்சை, கண் சிகிச்சை ஆகியவற்றுக்கான இலவச வைத்திய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக் கிழமை இக் கண்காட்சியை நடத்துவதற்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அனுமதி வழங்கியுள்ளார். (க-118)

### நாளை

வைகாசி 22
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தசி
காலை 7.47 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
முன்னிரவு 10.43 வரை.
பூரணை விரதம்
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அகங்காரத்தை அடியோடு அகற்றியவனுக்கு அணுவளவும் துன்பமில்லை.

### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



போர் நடந்த இடம்
இப்போது அமைதியாக இருப்பினும்
அதனைப் பண்படுத்து முன்
கவனமாக இருங்கள்!
முன்னர் மணிமணியாய்
நெல்விளைந்த பூமியிலே இப்போது தெட்டம் தெட்டமாய் மலிந்து கிடப்பவை "ஷெல்"லும் மிதிவெடியும் என்பதனை மறந்து விடாதீர்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்த்திருவிழா வானொலியில் அஞ்சல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள தேர்த் திருவிழா நிகழ்வுகள் காலை 9 மணி முதல் 11மணி வரை இலங்கை வானொலியின் தேசிய சேவையிலும், யாழ். சேவையிலும் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளன.

(ஐ-4)

## பண்டத்தரிப்பில் கடை உடைத்துத் திருட்டு

சண்டிலிப்பாய், ஜூன் 4

பண்டத்தரிப்பிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் கடை இரவு வேளையில் உடைக்கப்பட்டு சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த வேளையில் முன் பக்கப்பூட்டை உடைத்து உட்சென்ற திருடர்கள், அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மீன்ரின்கள், மைலோரின்கள், பால்மா பைக்கற்றுகள் ஆகியன உட்பட மற்றும் பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இத்திருட்டு சம்பவம் பற்றி கடை முகாமையாளர் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(க-135)

## பாடசாலையின் கட்டடங்கள் புனரமைப்பு

கொக்குவில், ஜூன் 4

போரினால் சேதமடைந்த கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் கட்டடப் பகுதிகள் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ஜி. ரி. இசற்.) புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கு வேண்டிய தளபாடங்களையும் வழங்கியுள்ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்தார்.

(க-69)

## உயர்வகுப்பு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட கல்விப் பொதுத்தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை ''சகச்சிர'' ஜனாதிபதி புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா. வே. குகேந்திரன் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கினார்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

### வீதி திறப்பது தாமதமாவதால்

# பொன்னாலை பாலத்தில் தினமும் காலையில் பயணிகள் தவம்கிடப்பு

காரைநகர், ஜூன் 4

தினமும் காலை வேளை பொன்னாலைப் பாதை திறப்பதில் காலதாமதம் ஏற்படுவதால் காரைநகர்ப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காலை 7.00 மணிக்குப் பின்னரே இப்பாதை கடற்படையினரால் திறக்கப்பட்டு மக்கள் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் செல்வோரும், பிற இடங்களில் இருந்து காரைநகர் செல்வோரும் மிக நீண்ட நேரம் பொன்னாலைச் சந்தியில் தவம் கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் திருமண வைபவங்கள், ஆலய உற்சவங்கள் பல நடைபெற்றன. இதற்கென வருகை தந்த நூற்றுக்கணக்கான மக்கள் நீண்ட நேரம் பொன்னாலைச் சந்தியில் காத்திருந்தனர். வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் நீண்ட நேரம் அங்கு தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு காலதாமதமாக பாதை திறக்கப்படுவதனால் பொதுமக்கள் தங்கள் அன்றாட அலுவல்களை உரிய நேரத்திற்கு செய்ய முடியாது உள்ளதாகவும், யாழ். போதனா வைத்தியசாலை, அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோர் உரிய நேரத்திற்குச் செல்ல முடியாது உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஐ-73)

## ஜனாதிபதி கவலை தெரிவிப்பு

நேபாள மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்ட செய்தி அறிந்து தாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பேரிழப்புக்கு இலங்கை மக்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் நேபாளத்துக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தப்படுகொலைச் சம்பவங்களையிட்டு தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

(-ஐ5-9)

## நலன்புரி நிலையங்களில் குழாய்க் கிணறு அமைப்பு

வலி. தெற்கு, ஜூன் 4

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கன்னாகம் பகுதியில் உள்ள இரண்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நீர் வசதி கருதி இரண்டு குழாய்க்கிணறுகளை அமைத்துக்கொடுக்கஉள்ளது.

சுன்னாகம் பழனி கோயிலடி நலன்புரி நிலையம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களுக்கே குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

இந்த நலன்புரி நிலையங்களில் வாழும் பயனாளிகளின் பங்களிப்புடன் சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் மேற்படி இரு குழாய் நீர் கிணறுகளும் அமைக்கப்பட உள்ளன.

(ஐ-152)

## கல்முனை பிரதேச செயலகத்தின் தமிழ்ப்பிரிவு மூடப்படும் நிலையில்

கல்முனை, ஜூன் 4

கல்முனை தமிழ்ப் பிரிவுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் உப-பிரதேச செயலகம் தன்னிடமிருந்த அபிவிருத்தி செய்யக் கூடிய அதிகாரத்தையும் இழந்து, வடக்கு கிழக்கு மாகாண அரசு வழங்கும் நிதி ஒதுக்கீடும் நிறுத்தப்பட்டதால், இப்பிரதேச செயலகம் மூடப்பட வேண்டிய வாய்ப்பு எதிர்காலத்தில் தோன்றலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் கல்முனைப் பிரதேச தமிழ்–முஸ்லிம் மக்களுக்கென ஒரு பிரதேச செயலகமே (உதவி அரசாங்க அதிபர் பிரிவு) இயங்கி வந்தது. இது எதிர்காலத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளையும், பிணக்குகளையும் ஏற்படுத்தலாம் என்ற ஐயத்தின் காரணமாக இரு வேறு பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டது.

பிரிக்கப்பட்ட போதிருந்தே முஸ்லிம் பிரிவுக்கான உப பிரதேச செயலகம் ''பிரதேச செயலக''மாக தரமுயர்த்தப்பட்டிருந்ததோடு காணி, நிதி, அபிவிருத்தி உட்பட சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் 1989–04–12ஆம் திகதி முதல் ஹிஜ்றா வீதியில் உள்ள கச்சேரிக் கட்டடத்தில் இயங்கி வந்த தமிழ்ப் பிரிவுக்கான உப–பிரதேச செயலகம் (தரம் உயர்வதை) மாகாண சபையினால் பொறுப்பேற்கப்பட்டு நிதி உதவியையும் அளித்து வந்தது.

1993–07–28 ஆம் திகதி இதனை ''பிரதேச செயலக'' மாக தரமுயர்த்துவதற்கான அனுமதியை அமைச்சரவை அளித்திருந்த போதிலும், இதுவரை தரமுயர்த்தப்படாமல் உள்ளது. இதன் மர்மம் தான் என்ன என்று அப்பகுதி தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(க)

### காணாமற்போனோர் விசாரணை:

## முறைப்பாட்டுக்காரர், சாட்சிகள் யாழ். பொலீஸுக்கு அழைப்பு

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பின் வருவோர் தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்காக அவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும், சாட்சிகளையும் யாழ். பொலீஸ் நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுள்ளனர்,

காணாமற்போனோர், அவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தோர், சாட்சியங்களுக்கு அழைக்கப்பட்டோர் ஆகியோரின் பெயர் விவரங்கள் வருமாறு!-

★ கந்தசாமி புஸ்பலதா, (கோ. இல. பி- 14) மந்துவில் மேற்கு கதிரன் செல்வலக்சுமி (முறைப்பாடு) கதிரன் கந்தசாமி (சாட்சி)

★ எஸ்–ஆனந்த கிருஷ்ணன் (கோ. இல. பி- 47) அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, சதாசிவம் சிவகுருநாதன் (முறைப்பாடு) சதீஸ்நந்தன், அம்மன் கோயிலடி. திருநெல்வேலி, நாகலோகதேவி, செல்வா, (சாட்சிகள்)

★ கதிரவேலு தயானந்தன் (கோ. இல, ஏ–21)கதிரவேலு -நகுலேஸவரி (முறைப்பாடு)

★ ஜோன்பிள்ளை — அன்ரன் அமிலநாதன் (கோ. இல. ஏ–21[1]) மேரி அன்கனிஸ்ரா (முறைப்பாடு)

★ வல்லிபுரம்— பாஸ்கரன் (கோ. இல. பி-85) மறவன் புலோ கிழக்கு (இவர் தொடர்பான விசாரணைக்கு இவரது உறவினர்கள் சமூகம் தரவும்)

★ சின்னத்தம்பி — சிவகுமார் (கோ.இல.ஏ-13) சிவகுமார்—விஜியா நாவற்குழி வடக்கு (முறைப்பாடு)

★ சின்னட்டி — கோபால கிருஷ்ணன் (கோ.இல.பி–77) சங்கரன்—சின்னட்டி கைதடி தெற்கு (முறைப்பாடு) பரமேஸ்வான் (சாட்சி)

★ இராசதுரை — சுரேஸ் குமார் (கோ.இல.பி–76) சிவபாலன்—சுரேஸ்குமார் விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு (முறைப்பாடு) நாகையா — ஜெயராஜ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் (சாட்சி)

★ நாகசூரி — சசிகரன் கோ.இல.50)கார்த்திகேசு—சசிகரன் ஆடியபாதம் வீதி, நல்லூர் தெற்கு(முறைப்பாடு)

★ கந்தன்—விமலேந்திரன் (கோ. இல. பி–46) இயற்றாலை,வரணி கோவிந்தன்—கந்தன் (முறைப்பாடு) சின்னத்துரை—சிவராசா, கதிர்காமன் — கிருஷ்ணபிள்ளை, சந்திரன், கந்தன்—லக்ஷ்மி, முத்துக்குமார்—புவனேஸ்வரி சாட்சி)

★ துரை— தங்கத்துரை (கோ. இல. பி–68) முன்னை விநாயகர் கோயிலடி, கரணவாய் துரை — மகேஸ்வரி (முறைப்பாடு) கந்தையா—துரை, அஜந்தன், துரைராசா—ஜெயலஷ்மி (சாட்சி)

★ சின்னத்தம்பி—ஞானேந்திரன் (கோ. இல. பி-83) எழுதுமட்டுவாழ், பரமலக்சுமி கரணவாய், கரவெட்டி (முறைப்பாடு) [illegible] சந்திரசேகரன், நல்லதம்பி —வேலுப்பிள்ளை (சாட்சி)

(க-4)

## தொழில் நுட்பக் கல்லூரியில் மாகாண உபபணிமனை திறப்பு

### புதிய பணிப்பாளர் இன்று பதவியேற்பு

தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு — கிழக்கு மாகாண உபபணிமனை ஒன்று கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரிகளின் முன்னாள் பிராந்தியப் பணிப்பாளர் க. ஜெயரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உபபணிமனையைத் திறந்து வைப்பார்.

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். கல்வியற்கல்லூரி பீடாதிபதி ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான வடக்கு—கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளராகப் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ந. யோகராஜன் இன்று பதவியேற்றுக் கொள்வார்.

(க-7)

## சிறுவர் நூல் நிலையம்

குருநகர், ஜூன் 4

குருநகர் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நூல் நிலையத்தை ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த கேதிஸ் அண்மையில் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் யாழ். கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜகோபாலும் கலந்து கொண்டார்.

(க-5)

## 'சார்க்' கூட்டம் ஒத்திவைப்பு

நேபாள மன்னர் குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து 'சார்க்' நாடுகளின் நிலையியல் குழுக் கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் இந்த வாரம் கொழும்பில் இடம் பெற இருந்தது (ஒ)

## தமிழ்த் தின விழா

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் தமிழ்த் தின விழாவும், புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழாவும் எதிர்வரும் வியாழக்கிழமைகாலை 10.00 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைவரும், ஈ. பி. டி. பியின் தீவக அமைப்பாளருமான ந. மதனராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச செயலர் க. இரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக தீவகக்கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. தவராசா, வேலணைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-7)

## சந்தைக்கட்டடம் பயன்பாடின்றி உள்ளது

கோப்பாய், ஜூன் 4

கோப்பாய் பிரதேச மக்களின் நன்மைகருதி கடந்த மார்ச் மாதத்தில் கோப்பாய் சந்திக்கு அருகே உள்ள கட்டடத்தில், பொதுச்சந்தைஒன்று கோப்பாய் பிரதேச சபையினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் அச் சந்தையைப் பயன்படுத்த போதிய வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் இன்மையால் அது மூடப்பட்ட நிலையில் உள்ளது.

தற்போது அக்கட்டடத்தில் அபிவிருத்தித்தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரிட்டிஷ் தேர்தலில் கவர்ச்சி வேட்பாளர்



எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெற உள்ள பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில், ஸ்டப்போர்ட் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிடும், 'மொடல்' அழகி ஜோர்டான் இவர்தான்.

இவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், அனைவருக்கும் இலவசமாக 'பிளாஸ்டிக்' சத்திரசிகிச்சை செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'தேர்தல் என்றால் பிரிட்டிஷ் தேர்தல் தான்' என்று பெருமூச்சு எழுகிறதல்லவா?

## மன்னரைக் கொன்றது இளவரசரா?

# விரிவான விசாரணை கோரி நேபாளத்தில் ஆர்ப்பாட்டம்!

காத்மண்டு,ஜூன்4

நேபாள மன்னர் குடும்பத்தவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரி தலைநகர் காத்மண்டுவில் பெருந்திரளான மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைக்க பொலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தினர்.

இராணுவ மருத்துவமனையில் மன்னர் பிரேந்திரா உட்பட அரச குடும்பத்தவரின் உடல்கள் வைக்கப்பட்டிருந்த சமயமே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மன்னரையும் குடும்ப உறுப்பினர்களையும் இளவரசர் திபேந்திரா சுட்டுக்கொன்றதாகக் கூறப்படுவது நம்பக்கூடியதாக இல்லை என்று பெருமபாலான நோபாள மக்கள் கருதுகின்றனர்.

நேபாளத்தில் நாடாளுமன்ற ஆட்சி முறையை அகற்றி மீண்டும் நேரடியான மன்னர் ஆட்சியை ஏற்படுத்த மறைந்த மன்னர் எண்ணியிருந்ததாக சில மாதங்களின் முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தற்கும் படுகொலைகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்.

இதேசமயம் -

நேபாளத்தில் அரச குடும்பத்தினர் கொல்லப்பட்டது தற்செயலான விபத்து என்று புதிததாக நியமிக்கப்பட்ட மன்னரின் சார்பாளரும் மறைந்த மன்னரின் சகோதரருமான ஜியானேந்திரா தெரிவித்துள்ளார். (ஒ-6-9)

## தற்கொலைத் தாக்குதல் எதிரொலி:

# பலஸ்தீன நகரங்களின் வழிகளை இஸ்ரேலிய இராணுவம் மூடியது

டெல்அவிவ்,ஜூன்4

மேற்குக் கரை மற்றும் காஸா நிலப் பகுதிகளுக்குச் செல்லும் வழிகளை மூடிவிட இஸ்ரேல் தனது இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலியத் தலைநகர் டெல்அவிவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த ஆணையைத் தொடர்ந்து, இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீன நகரங்களுக்குச் செல்லும் வழிகளில் நேற்று முன்தினம் முதல் தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மேற்குக் கரை மற்றும் காஸாவில் உள்ள பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து எவரும் வெளியேறவோ - உட்செல்லவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த வாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குத் தாம் மேற்கொள்ளவிருந்த சுற்றுப் பயணத்தை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரொன் ரத்துச் செய்துவிட்டதாக இஸ்ரேலிய அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உலக அரங்கில்

இதே சமயம் டெல்அவிவில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்துள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் இஸ்ரேலியர்களுடன் போர் நிறுத்தம் ஏற்பட ஆவன அனைத்து நடவடிக்கைகளையும் செய்யத் தான் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு டெல்அவிவில் கேளிக்கை விடுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்ததுடன் நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தது தெரிந்ததே. (ஒ-6-9)

## ரஷ்ய யூதரின் இறுதிச் சடங்குக்கு இஸ்ரேலிய மலர்ச்சாலைகள் மறுப்பு

டெல்அவிவ்,ஜூன்4

இஸ்ரேல் தலைநகரில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் பலியானவர்களில் இருவரின் சடலங்களை அடக்கம் செய்யும் பணிக்கு இஸ்ரேலில் இறுதிச்சடங்கு ஏற்பாட்டாளர்களான மலர்ச்சாலைகள் மறுத்துவிட்டன.

இறந்த இருவரின் பெற்றோர்களும் யூதர்கள் அல்ல என்பதே இதற்குக் காரணமாகும். இஸ்ரேலில் வைதீக யூத நிறுவனமே மலர்ச்சாலைகளை நடத்தி வருகிறது.

ஒருவரின் தாய் யூத இனத்தைச் சேர்தவராக இருந்தால் மட்டமே அவரை யூதராக வைதீக யூதர் சபை ஏற்றுக்கொள்ளும் -

ஆனால் இறந்த இருவரும் ரஷ்யாவில் இருந்து வெளியேறி 1990களில் இஸ்ரேலில் குடியேறிய ரஷ்ய யூதர்களாவார்கள். இதனாலேயே அவர்களது சடலங்களை அடக்கம் செய்ய இஸ்ரேலிய மலர்ச்சாலைகள் மறுத்துள்ளன.

மலர்ச்சாலைகளின் நடவடிக்கையை இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் ரஷ்ய யூதர் இன உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர். மனிதாபிமானமற்ற செயல் இது என்று அவர்கள் தெரிவித்தனர். (ஒ-6-9)

# நேபாளத்தின் நிலை குறித்து இந்திய அமைச்சரவை ஆராய்வு

புதுடில்லி,ஜூன்4

நேபாள மன்னர் கொல்லப்பட்டதால் எழுந்துள்ள நிலைமை குறித்து ஆராய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாதுகாப்புக் குறித்த அமைச்சரவைக் குழுவை நேற்றுக் கூட்டி ஆராய்ந்தார்.

நேபாளத்துக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நேபாளத்தின் பாதுகாப்பை இந்திய இராணுவமே கவனித்து வருகிறது. நேபாள நாட்டுக்கு தனியான படை இருந்தபோதும், அதன் நடவடிக்கைகள் அங்கு நிலை கொண்டுள்ள இந்திய இராணுவ அதிகாரிகளால் வழிப்படுத்தப்படுகிறது.

தற்போது அரச குடும்பப் படுகொலைகளால் நாட்டில் தோன்றியுள்ள குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி, அங்கு கம்யூனிஸ ஆட்சியை ஏற்படுத்தும் தமது போராட்டத்தை மாவோ தீவிரவாதிகள் தீவிரப்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

அதனால், நேபாளத்தின் நிலை குறித்து இந்தியா கூடுதல் கவனத்துடன் ஆராய்ந்ததாகக் கூறப்படுகின்றது. (ஒ-6-9)

### "ஜல சமாதி"



மலேசியாவின் மேற்குக் கடலில் அண்டன் தீவுக்கு அருகே, கடந்த திங்கட்கிழமை, பனாமா கப்பலான 'சிங்கப்பூர்டைமர்' விபத்துக்குள்ளாகி, நீரில் மூழ்கிக் கொண்டிருந்த சமயம் எடுத்த படம். மற்றொரு கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளான இந்தக் கப்பலின் பணியாளர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

## மோசடிகளைத் தடுப்பதற்காக

# தஞ்சமடைந்தவர்களுக்கு கனடாவில் விசேட அட்டை

ஒட்டாவா,ஜூன்4

கனடாவில் சட்டபூர்வமாக வாழும் குடியேற்றவாசிகளுக்கு 'ஸ்மார்ட் காட்' எனப்படும் விசேட அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர் எலினர் கப்லான கடந்த வாரம் செய்தியாளர்களிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கனடாவில் சட்டபூர்வமாகத் தஞ்சமடைந்தவர்களின் ஆவணங்களில் மோசடி செய்து, அவற்றைப் பயன்படுத்திச் சட்டவிரோதமாகக் கனடாவுக்குள் நுழைந்து அங்கு வாழ்வதாகவும் -

இவ்வாறான சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாகவும் -

அமைச்சர் கப்லான் மேலும் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட ஆவணங்களே கனடாவில் தற்போது வழங்கப்படுவதாகத் தெரிவித்த அவர், நவீன தொழிநுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மோசடி செய்ய முடியாத கடவுச்சீட்டுகள் உட்பட ஆவணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினார். (ஒ)

### புகைத்தலுக்கு எதிரான பிரசாரம்



கடந்த வியாழக்கிழமை சர்வதேச புகைத்தல் எதிர்புத் தினம் உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. அதனையொட்டி பாங்கொக்கில் புகைத்தலின் கெடுதியை விளக்கும் வகையில் பாடசாலை மாணவர்கள் நகர வீதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## கறுப்பர்களிடையே எய்ட்ஸ் நோய் அதிகரிப்பு

வாஷிங்டன்,ஜூன்4

அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் கறுப்பின வாலிபர்களிடையே எய்ட்ஸ் நோய் பரவுவது அதிகரித்துள்ளது.

நோய்த் தடுப்புக்கான மத்திய நிலையம் இதனை அறிவித்துள்ளது.

வருடாந்தம் இவர்களிடையே 37 சதவீத அதிகரிப்பு காணப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது. (ஐ-7)

# மூத்த பலஸ்தீன போராளி மாரடைப்பால் மரணம்!

## மக்கள் சோகத்தில்! தலைவர்கள் அஞ்சலி!

ஜெருசலம்,ஜூன்4

பலஸ்தீன போராட்டத்தின் ஆரம்பகால போராளியான பைஸல் ஹுஸைனி மாரடைப்பின் காரணமாக குவைத்தில் வியாழனன்று காலமானார். இவரது இழப்பால் பலஸ்தீனியர்கள் பெரும் துயருற்றுள்ளனர்.

பிரஸ்ஸல்ஸ் சென்றிருக்கும் பலஸ்தீன தலைவர் அரபாத் அங்கிருந்து விடுத்த இரங்கல் செய்தியில் துயரமிக்க செய்தி இதுவெனக் கூறினார்.

பலஸ்தீன அமைச்சரவைச் செயலாளர் அஹ்மத் அப்துர் ரஹ்மான், பலஸ்தீனர்கள் ஒரு சிறந்த தலைவரையும் மாபெரும் கதாநாயகனையும் இழந்து விட்டதாகக் கூறினார்.

இவரது மறைவு குறித்து அமெரிக்காவும் கவலை கொள்வதாக ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்சர் கூறினார்.

இவர் சமாதானத்துக்காக அதிகம் பாடுபட்டவர் எனவும் அவரது குடும்பத்திற்கும் பலஸ்தீனர்களுக்கும் அவரது மறைவுக்காக அனுதாபம் தெரிவிப்பதாகவும் பவுச்சர் மேலும் கூறினார்.

மத்திய கிழக்குக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி மிகல் ஏஞ்சல் மொராமனோஸ் ஹுஸைனியின் ஜனாஸாவுக்கு இறுதி மரியாதை செலுத்தினார். (ஐ-7)

# மணிப்பூர் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி

இம்பாலா,ஜூன்4

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாநில சட்டப்பேரவையின் செயற்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மத்திய அமைச்சரவை, நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

தோழமைக் கட்சியான பாரதிய ஜனதாவின் உறுப்பினர்கள் சமதாக் கட்சி அரசு கொண்டு வந்த நம்பிக்கைப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததால் அந்த அரசு கவிழ்ந்ததும்-

ஆனாலும் வேறு எவரும் தமது பெரும்பான்மையை நிரூபிக்கத்தவறியதால், மணிப்பூரில் கடந்த ஒரு வாரகாலமாக ஆட்சியமைப்பதில் தேக்க நிலை தொடர்ந்ததும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினர் நடத்தும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்

**மணிவிழாச் சிறப்பு ஆய்வு நூல் வெளியீடு**

இடம் :- கைலாசபதிகலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்.
காலம் :- நாளை (05-06-2001) செவ்வாய்க்கிழமை
நேரம் :- காலை 08.30 மணி
தலைவர் :- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
மங்கள இசை :- கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்.
மங்கள விளக்கேற்றல் :- பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம்
(பீடாதிபதி, மருத்துவபீடம்)
திரு.மா.நடராஜசுந்தரம்
(பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கை வணிகபீடம்)
தமிழ் வேதம் ஓதல் :- செல்வி தனசொரூபி நவரத்தினம்
தமிழ்த்தாய் வாழ்த்து :- திரு.நா.வீ.மு.நவரத்தினம்
(தலைவர், இசைத்துறை)
வரவேற்புரை :- கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
(தலைவர், தமிழ்த்துறை)
அருளாசியுரை :- சிவாகம கலாநிதி நா.சர்வேஸ்வரக்குருக்கள்
(கதிரைமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)
தலைமையுரை :-
வாழ்த்துரை :- பேராசிரியர் இ.குமாரவடிவேலு
(பீடாதிபதி, விஞ்ஞான பீடம்)
பேராசிரியர் செ.பாலச்சந்திரன்
(பீடாதிபதி, கலைப்பீடம்)
பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்து நாகரிகத்துறை)
கலாநிதி நா.சண்முகலிங்கன்
(தலைவர், சமூகவியல், அரசறிவியல் துறை)
திரு.க.தேவராஜா
(பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சார்பாக)
திரு.க.கனகரட்ணம்
(நிதியாளர், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சார்பாக)
திரு.க.இரத்தினசபாபதி
(பல்கலைக்கழக ஊழியர் சார்பாக)
திரு.ந.குகபரன்
(பல்கலைக்கழக மாணவர் சார்பாக)
நயப்புரை :- பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
(தலைவர், வரலாற்றுத்துறை)
பேராசிரியர் கா.குகபாலன் (புவியியற்றுறை)
திரு.ம.இரகுநாதன் (முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை)
திரு.க.அருந்தாகரன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை)
விழாநாயகர் கௌரவிப்பு
ஆய்வு நூல் வெளியீடு
ஆய்வு நூல் வெளியீட்டுரை: பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
(சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்)
முதற்பிரதி வழங்கல்
சிறப்புப் பிரதி வழங்கல்
நன்றியுரை : செல்வி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
(விரிவுரையாளர் தமிழ்த்துறை)

பிற்பகல் 2 மணிக்கு
[கலை நிகழ்ச்சி: காத்தவராயன் கூத்து (யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகம்)]

அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதி ஒன்றின் விலை: ரூபா 1000/=
(C/16973)

இவ்வண்ணம்
தமிழ்த்துறையினர்


## புலோலியில் ப.நோ.கூ. சங்கக் கிளை அமைக்க முடிவு

வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களின் நலன் கருதி பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்தின் கிளை அலுவலகம் விரைவில் புலோலியில் அமைக்கப்பட வுள்ளதாக சங்கத் தலைவர் க.இராசரத்தினம் தெரிவித்தார்.

இடம்பெயர்வின் பின்னர் சங்கத்தின் தலைமை அலுவலகம் கோணடாவிலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (க-117)


CHUNDIKULI GIRLS' COLLEGE
OLD GIRLS' ASSOCIATION, JAFFNA
ANNUAL GENERAL MEETING
AND
FELLOWSHIP LUNCH
Will be held on 09-06-2001
at the College Premises

PROGRAMME - 10.30a.m Thanks giving Service. at St.John the Baptist Church.
12.00 noon A.G.M.
1.00p.m Lunch
4.00p.m Principal's Tea.

(88592) - SECRETARY.



இதய அஞ்சலி

சிற்பக்கலாஞானி கலாபூஷணம்
ஆறுமுகம் ஜீவரட்ணம்

நவிண்டில் குலனைப் பிள்ளையார் ஆலயத்துக்கு சித்திரத் தேரை அமைத்துத்தந்து எம்முடன் அன்போடு பழகிவந்த ஸ்ரீமான் ஆ.ஜீவரட்ணம் அவர்களுக்கு இன்றைய தினத்தில் எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேர்த்திருவிழா உபயகாரர்
நவிண்டில் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார்,
(88610) சந்திரசேகரம்பிள்ளை சிவகுமார்.



31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆறுமுகம் செல்லையா

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியை
திருமதி மகாலட்சுமி வரதராசா அவர்களின்
அன்புத் தந்தையார்
ஆறுமுகம் செல்லையா அவர்கள்

மறைவெய்தியமையையிட்டு துயருறும் ஆசிரியைக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சபையினர்,
(88575) பழைய மாணவர் சங்கத்தினர்.


## போலிக் குற்றச்சாட்டைச் சுமத்தி

# குடும்பஸ்தர் இருவரை அடித்து காவலில் வைத்திருந்த படையினர்!

## நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

மட்டக்களப்பு,ஜூன்4

போலிக் குற்றச்சாட்டைச் சுமத்தி குடும்பஸ்தர் இருவரை அடித்து மூன்று தினங்கள் தடுத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

திருட்டுக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரமோ, தடுத்து வைக்கும் அதிகாரமோ விசேட அதிரடிப்படைக்குக் கிடையாது எனத் தெரிவித்த நீதிபதி இருவரை அடித்துக் காயப்படுத்தியமை, தடுத்து வைத்திருந்தமை ஆகியவை தொடர்பாக நீதிமன்றத்தில் மண்டூர் விசேட அதிரடிப்படை முகாம் பொறுபதிகாரி விளக்கமளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மண்டூர் முதலாம் குறிச்சியைச் சேர்ந்த வசந்தாதேவி சிவநாதன் என்பவர் செய்த முறைப்பாட்டில் அதே ஊரைச் சேர்ந்த லட்சுமிப்பிள்ளை, செல்வநாயகம் ஆகியோர் தனது 42 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தாலிக்கொடியைத் திருடியதாகத் தெரிவித்திருந்தார். இவர் முதலில் விசேட அதிரடிப் படை முகாமில் முறைப்பாடு செய்ததையடுத்து விசேட அதிரடிப் படையினர் அந்த இருவரையும் கைது செய்து அவர்களைக் கடுமையாகத் தாக்கி, மூன்று தினங்கள் தடுத்து வைத்திருந்துவிட்டு வெல்லாவெளிப் பொலீஸில் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயங்களுடன் ஒப்படைக்கப்பட்ட இருவரையும் வெல்லாவெளிப் பொலீஸார் நீதிவான் முன்னிலையில் நிறுத்தியபோது அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்குமாறும் சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெறுமாறும் உத்தரவிட்டார்.

வெல்லாவெளிப் பொலஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரட்ணாயக்கா தலைமையிலான பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது இக்குற்றச்சாட்டு போலியானது எனத் தெரியவந்ததுடன், களவாடப்பட்டதாகக் கூறப்பட்ட தாலியை முறைப்பாட்டாளர்களின் வீட்டில் இருந்து பொலீஸார் மீட்டனர். பொலீஸாரின் விசாரணைகளில் இக்குற்றச்சாட்டு போலியானது என்பதுடன் முறைப்பாட்டாளர்களும், விசேட அதிரடிப்படையினரும் அப் பாவிகள் இருவரைத் தாக்கியிருக் கிறார்கள் என்பதும் தெரியவந்தது. இதனையடுத்து முறைப்பாட்டாளர்களான எம்.சிவநாதன், திருமதி வசந்தாதேவி சிவநாதன் ஆகியோரை பொலீஸார் கைது செய்து நீதிபதி முன்னிலையில் நிறுத்தினர். இருவரையும் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்து வழக்கை ஒத்திவைத்தார்.

தாக்குதலுக்கு உள்ளான செல்வநாயகம் என்பவரின் கை எலும்பு முறிந்திருப்பதாகவும், லட்சுமிப்பிள்ளைக்கும் அடிகாயங்கள் இருப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி ஏ.ஜாபீர் தமது அறிக் கையில் தெரிவித்திருக்கின்றார். (உ)

## சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை யாழ். மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இந்தப் பூங்காவின் திறப்பு விழா வைபவம் வித்தியாலய அதிபர் எஸ். எஸ்.தங்கராஜாவின் தலைமையில் நடைபெற்றது. (க-51)

## கிளிநொச்சி நகரில் மீண்டும் அரச செயலகம்

கடந்த 5 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி அரச செயலகம் மீண்டும் கிளிநொச்சி நகரிலுள்ள செயலகக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் அனைத்துச் செயலகப் பணிகளும் கிளிநொச்சி அரச செயலகத்திலேயே நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் தற்காலிக கொட்டகையில் அரச செயலகம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)


ஓராண்டு நினைவஞ்சலி

நெஞ்சுவிட்டகலாத நீங்கா நினைவலைகள்

அணைந்தும் அணையாத தீபங்கள்


அமரர்
இராமு வேலுப்பிள்ளை
மலர்வு : 24-11-1916
உதிர்வு : 14-01-2000


அமரர்
சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தி
(அகால மரணம்)
02-05-1959
17-05-2000


அமரர்
பொன்னம்பலம் சுப்பிரமணியம்
(அகால மரணம்)
மலர்வு : 15-10-1940
உதிர்வு : 18-05-2000


திருமதி
இராசலட்சுமி சுப்பிரமணியம்
(அகால மரணம்)
17-10-1943
21-05-2000

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து இன்று அணைந்தும் அணையாத தீபமாய் ஒளி வீசி வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வங்களே! "ஷெல்"லினால் ஏற்பட்ட உங்கள் பிரிவு எம்மால் தாங்க முடியவில்லையே! இன்று ஓராண்டு நினைவில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (05-06-2001) செவ்வாய்க்கிழமை கைதடி தெற்கிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய காலகட்டத்தில் உறவினர்களும் நண்பர்களும் இடம்பெயர்ந்திருப்பதால் அழைப்புகள் கொடுக்க முடியவில்லை. இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய முகவரி:
கோயிலாக்கண்டி மத்தி, கைதடி.

முகவரி: [illegible] கைதடி [illegible]
[illegible] மைத்துனர், பிள்ளைகள்,
[illegible] சகோதரர், மருமக்கள்.
(88573)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கந்தரோடை அருள்மிகு அருளானந்த விநாயகர் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர்

**(திங்கட்கிழமை - 04.06.2001)**

## அருள் சுரக்கும் அருளானந்த விநாயகரின் அழகு இரத பவனி

வரலாற்றுப் பெருமை கொண்ட கந்தரோடைக் கிராமத்தில் எழில் கொஞ்சும் சூழலில் அமர்ந்து வேண்டுவார்க்கு வேண்டும் வரம் தந்து அருளாட்சி செய்கிறார் அருளானந்த விநாயகர். இங்கே கோயில் கொண்ட அருளானந்த விநாயகருக்கு வைகாசிப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக் கொண்டு பதினொரு தினங்கள் மகோற்சவம் நடைபெறும். இந்த நாள்களில் ஊர்மக்கள் எல்லாம் ஒன்றுதிரண்டு அருளானந்த விநாயகரின் திருவருளை வேண்டி நிற்பர்.

இந்த வகையில் 26.05.2001 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இம்மகோற்சவத்தில் இன்று இரதோற்சவம் நடைபெறுகிறது. மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தேரில் பஞ்சமுக விநாயகர் பவனிவருவது கண்கொள்ளாக்காட்சி. "சுவாலித்து எரியும் அக்கினியின்" தோற்றத்தில் அமைந்த இத்தேரானது அழித்தலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன.

அங்கு பஞ்சமுக விநாயகர் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. வாழ்க்கை என்னும் தேர் சிறப்பாக ஓடுவதற்கு நமது இதயத்தில் இறைவனை எப்போதும் இருத்துதல் வேண்டும்.

மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர்க்கவச முடிவில் குடை நிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனையும் இறைவனை தியானித்தால் அவனது அருட்குடைநிழல் நம்மை துயர வெயிலிலிருந்து பாதுகாக்கும்.

இந்த வகையில் பல தத்துவங்களை உள்ளடக்கிய அருளானந்த விநாயகரின் திருத்தேரை ஊர்அடியார்கள் எல்லாம் கூடி ஒன்றுபட்டு இழுக்க பக்தர்களின் "அரோகரா" ஓசையுடன் மேளதாள துந்துபிகள் ஒலிக்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, அற்புத அருளானந்த விநாயகரின் ஆனந்த ரதபவனி நடக்கிறது.

**அவன் தாள் பணிவோம்.**

அவன் அருள் பெறுவோம். இன்று இரத பவனி வரும் விநாயகரின் அருள் கந்தரோடை வாழ் மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

*ஆக்கம்:* மகோற்சவ குரு, தேவஸ்தான பிரதமகுரு: *சோ.வாகீஸ்வரக் குருக்கள்*
தேவஸ்தான ஆதீன கர்த்தா: *இ.சோமேஸ்வரசர்மா*

*மலர் அமைப்பு:* கந்தரோடையூர் க.விக்கி,
*(அலுவலர், சுன்னாகம் வர்த்தகர் சங்கம்)*

### இன்று தேரில் பவனிவரும் அருளானந்த விநாயகரின் அருள்வேண்டி வணங்கும் சுன்னாகம் வர்த்தகப் பெருமக்கள்


* சண்ராஜ் கொமியூனிக்கேசன் *
(உள்ளூர், வெளியூர் அழைப்புக்களை உடனுக்குடன் பெற்றிட)
(T.P.No-0094/070/212750)

* கணேசன்ஸ் புடவையகம் *
(சிறந்த நவநாகரிக புடைவைகளை மலிவு விலையில் பெற்றிட)

* சிறீகணேசா ஸ்ரோர்ஸ் *
(பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட)

* விதுசன் அழகுமாடம் *
(அழகுசாதன அலங்காரப் பொருள் விற்பனையாளர்)

* ஜெயகிருஷ்ணா *
(தரமான சீமெந்து, பெயின்ற், இரும்புவகைகள் விற்பனையாளர்)

* சிவபாக்கியா ரெலிகொம் *
(உள்ளூர், வெளியூர் அழைப்புக்களை உடனுக்குடன் பெற்றிட)
(0094/070/212404)

* லக்சுமி பான்சி *
(அழகு சாதன அலங்காரப் பொருள் விற்பனையாளர்)

* மெடிக்கெயா பார்மசி *
(தரமான ஆங்கில மருந்து வகைகளை மலிவு விலையில் பெற்றிட)

* அலோமாஸ் *
(அழகு சாதன அலங்காரப் பொருள் விற்பனையின் முன்னோடிகள்)

* நிக்கோன்ஸ் போட்டோ *
(நவீன முறையில் புகைப்படங்கள் எடுத்திட)

* ஜெஸ்மின் வீடியோ கொம்பிளக்ஸ் *
(புதிய வீடியோ படப்பிரதிகளை உடன் பெற்றிட)

* துவாரகாஸ் எலக்ரிக்கல்ஸ் *
(மின்சார உபகரணங்களை மலிவு விலையில் பெற்றிட)

* விஷ்ணு அழகுமாடம் *
(அழகு சாதன அலங்காரப் பொருள்கள் விற்பனையாளர்)

* ஜெயமங்களாஸ் *
(அழகுசாதன அலங்காரப் பொருள்கள் விற்பனையாளர்)

* செனித் மல்ரி ஸ்பொட் *
(கடிகாரத் திருத்துநரும், அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளரும்)

* வசந்திஜா எலக்ரிக்கல்ஸ் *
(மின்சார உபகரணங்களை மலிவு விலையில் பெற்றிட)

* சிறி ஸ்ரோர்ஸ் *
(பலசரக்குப் பொருள்களை மலிவு விலையில் பெற்றிட)

* நாகலிங்கம் எரிபொருள் நிரப்பு நிலையம் *
(வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள்களை உடனுக்குடன் பெற்றிட)

* கிருஷ்ணா அழகுமாடம் *
(அழகுசாதன அலங்காரப் பொருள்கள் விற்பனையாளர்)

* தர்சன் மரஅரிவு காலை *
(மரத்தளபாடங்களைத் தரமாகச் செய்து பெற்றிட)

* சஞ்சீவி மெடிக்கல் *
(தரமான ஆங்கில மருந்து வகைகளை மலிவு விலையில் பெற்றிட)

* சுபேந்திரன், சசிக்குமார் நகையகம் *
(அசல், 22 கரட் தங்க நகைகளை ஓடருக்குச் செய்து பெற்றிட)

* துர்க்கா ஸ்ரேசனரிஸ் *
(புகழ் பெற்ற புத்தக வியாபாரிகள், புதினப் பத்திரிகை முகவர்கள்)

* ஜெயதுர்க்கா ரெலிகொம் *
(உள்ளூர், வெளியூர் அழைப்புக்களை உடனுக்குடன் பெற்றிட)
(0094/070/212770)

* புகழ் ஸ்ரோர்ஸ் *
(பிரபல மொத்த, சில்லறை பலசரக்கு வியாபாரிகள்)

* ஜெயா கணன் *
(பிரபல மொத்த, சில்லறை பலசரக்கு வியாபாரிகள்)

* குணம் கிறீம் ஹவுஸ் *
(ஐஸ்கிறீம் உலகின் முன்னோடிகள்)

* நடராசா-பாக்கியலக்சுமி பூபாலகிருஷ்ண ஆச்சிரமம் *

* ராஜா கொம்பிளக்ஸ் அன்ட் போட்டோஸ்ரற் *
(கோல்லீவ், சிகரெற் ஏஜென்ற்)

* விநாயகர் விற்பனை நிலையம் *
(தையல் இயந்திர உதிரிப்பாக விற்பனையாளர்)

(88538)


## நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தேக விஜயம்
16 - 12 - 1950



தேக வியோகம்
28 - 05 - 1999

**அமரர் சுப்பிரமணியம் கனகரட்ணம்**

திதி: 04-06-2001 சதுர்த்தசி

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*அல்லையம்பதி,*
*துன்னாலை, கரவெட்டி.*

மனைவி, பிள்ளைகள்.

(88153)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்மா, வாதநோய்கள்,
வலிப்புநோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சருமநோய்கள்,
மாத விடாய்க்குத்து,
இரத்தப் போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம், வீரியக்
குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
*சி.இராசரத்தினம்*
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459*

(88614)

## முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில் ஆறுமாதகாலப் பயிற்சி.
கடைசித் தகைமை: க.பொ.த. (சாதாரணதரம்)

*விவரங்களுக்கு :-*
பாலர் ஆசிரியர் சங்கம், கொக்குவில்.

(88603)




முன்னைவினையகற்றும் முடிப்பிள்ளையாரே

## தேரினில் வருக!

முத்திக்கு வித்தாகும் முதல்வனே தேரினில் வருக!
முன்னைவினையகற்றும் முடிப்பிள்ளையாரே தேரினில் வருக!
உன்னைச் சரணடையும் அடியவர்வடம் பிடித்திடவே தேரினில் வருக!
கன்னித்தமிழ் திருமுறைகள் ஒலித்திடவே தேரினில் வருக!
பின்னிப் பிணைந்த சைவத்தமிழ் வேலணை மண்ணில் தேரினில் வருக.

- வேலணை பாலா -

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ரதமேறி அருள்பொழியும் இத்தினத்தில் சகல நலன்களும் சமாதானமும் அமைதியும் பெற்று ஒன்றுகூடி வேலணையில் நல்லருள் பெற வாழ்த்துபவர்கள்:

*165, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வேணி களஞ்சிய
உரிமையாளரும், ஊழியர்களும்.

(C/16966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றம்
## சுவாமி விபுலானந்தர் நினைவு
## கட்டுரைப் போட்டி

அகில இலங்கை இந்து மாமன்றம் பாடசாலை மாணவர்களிடையே சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி கட்டுரைப் போட்டியை நடத்துகிறது. ஜூலை 19ஆம் திகதி சுவாமி விபுலானந்தர் நினைவு தினமாகும்.

கீழ்ப்பிரிவு (ஆண்டு 6 - 9) மாணவர்கள் "சுவாமி விபுலானந்தர் அடிகளாரை என்றும் போற்றுவோம்" எனும் தலைப்பில் 750 சொற்களுக்கு மேற்படாமலும், மேற்பிரிவு (ஆண்டு 10-13) மாணவர்கள் "இந்து பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தரடிகளின் பங்கு" எனும் தலைப்பில் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகள் எழுதி தங்களது பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தி அனுப்பவேண்டும். தாங்கள் கல்வி பயிலும் தரத்தையும் தவறாது குறிப்பிடுதல் வேண்டும்.

**சகல கட்டுரைகளும் 2001.06.30ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக,**

**அகில இலங்கை இந்து மாமன்றம்,**
*91/5, சேர் - சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,*
**கொழும்பு - 2**

**என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த கட்டுரைக்கு முதல் பரிசு ரூபா 2000 வழங்கப்படுவதுடன் பரிசுக்குரிய கட்டுரை அடுத்த "இந்து ஒளி" சஞ்சிகையிலும் வெளியிடப்படும். இரண்டாம் மூன்றாம் இடங்களையும் மற்றும் பாராட்டுப் பெறும் கட்டுரைகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பொதுச் செயலாளர்
*அகில இலங்கை இந்து மாமன்றம்.*

தொலைபேசி: 434990 (C/16969)

## தன்னைத் தானே கத்தியால் குத்திக் காயப்படுத்திய நபர்

கத்திக்குத்துக் காயங்களுக்கு இலக்கான இளம் குடும்பஸ்தர் மந்திகை ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை ரவிதரன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார்.

மனைவியைக் கத்தியால் குத்துவதற்குத் துரத்தியபோது உறவினர்கள் தடுத்ததால் ஆத்திரமுற்று தனது கையிலும், வயிற்றிலும் இந்த நபர் குத்திக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

துன்னாலை கலிகைச் சந்தியில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பலத்த காயங்களுக்கு இலக்கான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி யசோதரன் (வயது 19) என்ற இளைஞரே தலையில் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தெய்வீக உரை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு நம்மாழ்வார் உற்சவம் இடம்பெறும். மாலை 4 மணிக்கு "நம்மாழ்வார் திவ்வியப் பிரபந்த நயம்" என்னும் பொருள் பற்றி சு.மாணிக்கவாசகர் தெய்வீக உரை நிகழ்த் துவார். (க-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. வே.சிவசுந்தரம்** அதிபா (S.L.P.S 2-1)
**(யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)**

பாரினிலே நல்ல பண்பாளனாய்
கடமைத் திறத்திலே கண்ணியனாய்
அசிரிய அதிபர் சேவையில்
இருபத்தாறு வருட பூர்த்தியெய்தி
ஆலவிருட்சமாய் அறிவொளி பரப்பும்
சிவ சுந்தரச் செம்மலே
அதிபர் தரம் இரண்டு ஒன்றின்
ஆனந்தப் பூரிப்புடன்
பல் வளமும் பதவி உயர்வுகளும் பெற்று
பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பெற்றார் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள்,**
**பழைய மாணவர்கள்.**

யா/பிரான்பற்று கலைமகள்
வித்தியாலயம், பண்டத்தரிப்பு . (88628)

# நன்றி நவில்கின்றோம்



## ம.விக்ரர்
**(யாழ்.ஜெயம்)**

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவு குறித்து உடன் வந்து ஆறுதல் அளித்த அன்பு நெஞ்சங்களுக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும், திருவழிபாடுகள் நடத்தியும், தந்தி மூலமும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தும், பத்திரிகைவாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியும், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தும் இன்னும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் குருமுதல்வர் அருட்தந்தை செல்வராஜா மூலம் தங்களது அனுதாபச் செய்தியைத் தெரிவித்த இளைப்பாறிய ஆயர் மேதகு B.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கும், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அமரரது இறுதிப் பயணத்தில் பங்கேற்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், குருமட மாணவர்கள், சபை ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், அன்பர்கள், அயலவர்களுக்கும் சிறப்பாக எமது பாசமிகு தந்தையின் இறுதி யாத்திரை சிறப்புற அமைய கண்ணீர் அஞ்சலி நிகழ்வுகளை நிகழ்த்திய திருமறைக் கலாமன்றத்தினருக்கும், இறுதி அஞ்சலி நிகழ்வுகளை வானொலி மூலம் ஒலிபரப்புச் செய்த யாழ். சேவையினருக்கும் நன்றி கூற வார்த்தைகள் இன்றித் தவிக்கின்றோம். ஆயினும் எமது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறி நிற்கின்றோம்.

*67, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88644)

- குடும்பத்தினர்.

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**50 ஆவது** **18 ஆவது**



**திரு. வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன்**
(சுன்னாகம், மக்கள் வங்கி)



**செல்வன்**
**விக்னேஸ்வரன் மங்களதாஸ்**

**இன்று (04-06-2001) திங்கட்கிழமை பிறந்தநாளை தங்கள் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடும் இருவரையும் இறைவன் திருவருளுடன் வளமாக வாழ்க என உளமார வாழ்த்துகின்றேன்.**

"கணேச வாசம்"
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (88641)

- செல்வி கீதா கந்தவேள்

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்



| வைத்துள் அறிமுகம் | வானுலகில் சங்கமம் |
|---|---|
| 26 - 03 - 1964 | 07 - 06 - 1990 |

**செல்வி நர்மதா கனகரட்ணராஜா**
(நடன ஆசிரியை, யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

திதி:- 04-06-2001

**எங்கள் அன்பின் திருவுருவே!**
**ஆசையின் மணிவிளக்கே, பாசத்தின் பிறப்பிடமே!**
**குடும்பத்தின் ஒளி விளக்கே! எம்மை எல்லாம்**
**ஆறாத்துயரில் விட்டுவிட்டு, மீளாத் துயில் கொண்ட**
**அன்புச் செல்வமே! பதினொரு ஆண்டுகள்**
**அல்ல எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்,**
**உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாதம்மா!**

உங்கள் பிரிவால் துயருறும்:
**அம்மா, மாமன்மார், மாமிமார்,**
**சித்தப்பா, சித்திமார், தம்பிமார்,**
**தங்கைமார்.**

*சந்தையடி,*
*மானிப்பாய்.* (88632)

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்
**இளவாலைப் பங்குத் தந்தை அவர்களின்**
அனுசரணையுடன் நடத்தும்
**விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான**

We Serve

# இலவச கண் பரிசோதனை முகாம்

*காலம்:-* **05-06-2001 - (செவ்வாய் - போயா) காலை 8.00 மணி**
*இடம்:-* **இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி**
**கண் பரிசோதனையை மேற்கொள்பவர்**
யாழ். போதனா வைத்தியசாலை - கண் சத்திரசிகிச்சை நிபுணர்
**வைத்திய கலாநிதி S.குகதாசன் அவர்கள்**
**முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின் படியே பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.**
**யாழ். போதனா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படும்.**

*குறிப்பு:* இளவாலை, மயிலங்கூடல், சித்திரமேழி, மாரிசங்கூடல், சென்யூட், சென்ஜேம்ஸ், போயிட்டி, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் கிராமங்களில் வாழும் நலிவுற்ற முதியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**லயன் A.இருதயநாதன்,**
கழகத் தலைவர். (C/16978)

**லயன் S.S.தங்கராஜா**
சேவைத் திட்டத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாததடை சட்டத்தை நீக்குவது குறித்து தொடர்ந்து அரசு ஆராய்வு

## கதிர்காமர் தலைமையிலான குழு மீண்டும் கூடும்

கொழும்பு, ஜூன் 4
இலங்கையில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் கோரியுள்ளதனை அடுத்து வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிகாமர் தலைமையிலான குழு கடந்த வாரம் கூடி ஆராய்ந்துள்ளது.

இக்குழு இந்த விடயம் குறித்து மீண்டும் சில தினங்களில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் தலைமையில் கூடி ஆராயவுள்ளது.

தடைச்சட்டத்தை நீக்குவதனால் ஏற்படும் சாதகபாதகமான நிலை மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இலங்கையர்கள் தஞ்சம் கோருவது அதிகரித்துள்ளமையினால் அதனைக் குறைப்பதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு ஐரோப்பிய நாடுகள் இலங்கை வெளிநாட்டு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெளியுறவு அமைச்சர் தலைமையில் கூடி ஆராயும் இக்குழுவினர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## சம்பந்தர் குருபூசை

வலிகாமம் தெற்கு, ஜூன் 4
சுந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் இந்து மன்றம், கவின் கலை மன்றம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை நடைபெற உள்ளது.

மாணவர்களின் கூட்டு வழிபாடு, திருஞானசம்பந்த சுவாமிகளின் திருப்பதிகப் பண்ணிசை ஆகிய நிகழ்வுகளுடன். ஓய்வுபெற்ற அதிபர் கா. கணேசதாசனின் ''சம்பந்தரும் சற்புத்திர மார்க்கமும்'' என்ற பொருளிலான விசேட சொற்பொழிவும் இடம்பெற உள்ளது. (க-152)

## விகிதாசார அடிப்படையிலேயே அதிபர் நியமனம் வழங்குக!

### தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 4
பாடசாலை அதிபர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின்படி அமையப் போகும் நியமனங்கள் விகிதாசார அடிப்படையில் அமைய வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது.

இரண்டு வருடங்களின் முன் நடைபெற்ற அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையின் முடிவுகளின்படி ஒவ்வொரு தரத்திற்கும் நியமிக்கப்படக்கூடிய அதிபர்களின் எண்ணிக்கையைக் கல்விச் சேவை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளது.

இதன் பிரகாரம் அதிபர் தரம் i இல் 25 இலங்கைத் தமிழர்களும், 11 இந்தியத் தமிழர்களும், 16 முஸ்லிம்களும், 105 சிங்களவர்களும் நியமனம் பெற வாய்ப்புள்ளது.

தரம் ii இல் 62 இலங்கைத் தமிழர்களும், 27 இந்தியத் தமிழர்களும், 40 முஸ்லிம்களும், 375 சிங்களவர்களும் நியமனம் பெறலாம்.

தரம் iii இல் 356 இலங்கைத் தமிழர்களும், 156 இந்தியத் தமிழர்களும், 356 முஸ்லிம்களும், 2137 சிங்களவர்களும் நியமனம் பெறத் தகுதியானவர்களாக உள்ளனர்.

மொத்தத்தில் 443 இலங்கைத் தமிழர்களும், 194 இந்தியத் தமிழர்களும், 412 முஸ்லிம்களும், 2617 சிங்களவர்களும் நியமனத்திற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் புள்ளி விவரங்களின்படி, சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அதிகரித்த எண்ணிக்கையிலும், இலங்கைத் தமிழர்கள் குறைந்த எண்ணிக்கையிலும் நியமிக்கப்படக் கூடிய ஏது நிலை உள்ளது.

இந்தப் பாரபட்சமான நிலையை நீக்கி இந்த அதிபர் நியமனங்கள் விகிதாசார அடிப்படையில் இடம்பெற வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் கூறியுள்ளது. [க]

## ஈவினையில் ச. ச. நிலையம் திறப்பு விழா

வலிகாமம் தெற்கு, ஜூன் 4
ஈவினை கிழக்கு கலையரசி முன்பள்ளி மற்றும் சனசமூக நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெற உள்ளது.

கலையரசி முன்பள்ளி முன்றிலில் நடைபெற உள்ள இந் நிகழ்ச்சிகளுக்கு கி. இராசேந்திரம் தலைமை வகிப்பார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகவும் —

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன், பிரதேச செயலர் பிரிவு நிர்வாக உத்தியோகத்தர் ஆர். ஜெயப்பிரகாசம், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் உட்பட பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-152)

## சமய சந்நிதிகளில்

வேலணை மேற்கு பெரிய புலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (உ-86)

★ ★ ★

மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். (உ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 4
தொண்டமனாறு வீரமாகாளி அம்மன் கோயில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (க-4)

★ ★ ★

ஏழாலை வசந்தபுரம் அருள்மிகுவசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வைகாசி விசாகப் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-4)

★ ★ ★

சங்கானை அரசால் ஞான வைரவர் ஆலய விசாகப் பொங்கல் பெருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற உள்ளது. இரவு 7.30 மணிக்கு விசேட பூசை இடம்பெறும். (க-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 4
உசன் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமைகாலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்தோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். (க-6)

★ ★ ★

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமைமாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 6.30 மணிப்க்கு பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் 'கணபதி கடாட்சம்' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (117)

★ ★ ★

பருத்தித்துறை, ஜூன் 4
தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றும் நாளையும் நடைபெறும். (க.118)

★ ★ ★

கோப்பாய், ஜூன் 4
கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் தேர் மகோற்சவம் இன்று திங்கட் கிழமை காலை 10 மணிக்கும், தீர்த்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கும் நடைபெறும். (க-72)

★ ★ ★

மேலைப்புலோலி ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் இரதோற்சவம் இன்று திங்கட்கிழமையும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-118)

★ ★ ★

பருத்தித்துறை, ஜூன் 4
நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க-118)

## யாழ். பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் அறிவிப்பு

# சைக்கிளில் சமாந்தரமாகச் சென்றால் கடுமையான சட்ட நடவடிக்கை

### பிடிபடும் இடத்தில் அபராதம் செலுத்த நேரிடும்

யாழ்ப்பாணம். ஜூன் 4
வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது வீதிகளில்சமாந்தரமாகச் சைக்கிளில் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பொலீஸ் சுப்பிரின்டென்ட் குடாஹெட்டி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துப் பொலீஸ் பிரிவினரால் நேற்று யாழ். பொலீஸ் நிலையத்தில் நடத்தப்பட்ட வீதி ஒழுங்கு விதிகள் சம்பந்தமான கலந்துரையாடலிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

யாழ். பொலீஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் பொலீஸ் சுப்ரின்ரென்டென்ட் குடாஹெட்டி மேலும் தெரிவிக்கையில்:—

குடாநாட்டில் சமீப காலங்களில் வீதி விபத்துக்கள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த விபத்துக்களுக்கு முக்கிய காரணமாக இருப்பவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களாவர். மூன்று, நான்கு மாணவர்கள் வீதிகளில் செல்லும் போது சமாந்தரமாகவே செல்கின்றனர்.

இதனால் வீதியில் செல்லும் பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகனங்களில் செல்வோர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே இந்த வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக வீதிகளில் சைக்கிளில் செல்பவர்கள் ஒருவர் பின் ஒருவராகத் தனித்தனியே செல்ல வேண்டும் என மாணவர்கள் மற்றும் பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிவிப்பையும் மீறி வீதி ஒழுங்குச் சட்டங்களைக் கடைப்பிடிக்காதோர் மீது மிகவும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்

இவர்கள் நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்படும். அத்துடன் அந்த இடத்தில் வைத்தே தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார். (க-4-7)

# இந்திய மீனவரை சுடக்கூடாது; இலங்கைகடற்படைக்குஉத்தரவு

### புதுடில்லியில்அமைச்சர் ராஜபக்ஷ தகவல்

புதுடில்லி, ஜூன் 4
இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடாதென இலங்கை கடற்படையினருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் புதுடில்லியில் இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ இந்திய விவசாயத்துறை அமைச்சர் நிதிஷ்குமாருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேச்சுக்கள் நடத்தியபோதே அமைச்சர் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள் இந்தியக்கடற்பரப்பினுள் நுழைந்தால் நாம் அவர்களைக் கைது செய்கின்றோம். ஆனால், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவினால் இலங்கைக் கடற்படை அவர்களைச் சுட்டுக் கொன்று விடுகிறது. கடந்த வருடம் ஆறுமுறையும், இந்த வருடம் இதுவரை நான்கு முறையும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதில் பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர் என்று நிதஷ்குமார் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜபக்ஷ சர்வதேச எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடாதென கடற்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதால், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறமாட்டா என்று உறுதியளித்தார். (க)

பருத்தித்துறை
பல நோ. கூட்டுறவுச் சங்கம் (வ/து)

முக்கிய அறிவித்தல்

கிளைக்குழுத் தெரிவு - 2001

இச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவினை 2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னேற்பாடாகக் கிளைப் பொதுச் சபைக்குச் சமுகம் அளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களது பட்டியல் 2001/06/30 இல் உள்ளவாறு தயாரிக்கப்படவுள்ளது. அப்பட்டியலில் ரூபா 100 இற்குக் குறையாத பங்குப்பணத்தை வைத்திருப்பவர்களது பெயர்கள் மட்டுமே இடம்பெற முடியும் எனவே ரூபா100 இற்குக் குறைவான பங்குப் பணத்தை வைத்துள்ள அங்கத்தவர்களை 2001/06/30 ஆம் திகதிக்கு முன் மிகுதிப் பணத்தைச் செலுத்திப் பங்குப் பணத்தைப் பூரணப்படுத்துமாறு அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்கள் தேவைப்படும் அங்கத்தவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் செயலாளருடன் தொடர்பு கொள்ள முடியும்.

திரு. த. இராஜசிங்கம்
செயலாளர்

பரு. பல நோ. கூ. சங்கம்,
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
(சி/16971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

இருபாலை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் 66 பரப்பு வயலும் தென்னங்காணியும் கடையிற் சுவாமி ஒழுங்கையில் 3 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இரகுநாதமுதலியார், 39, பிறவுண் வீதி, நீராவியடி. (88595)

### Video CD விற்பனைக்கு

புதிதாக கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஆங்கில வீடியோ CDக்கள் மிக மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.கஜன், புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு. காலை 7 மணி தொடக்கம் 10 மணி, மாலை 4மணி தொடக்கம் 7 மணி வரை பார்வையிடலாம். (88620)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, வேலை பார்ப்பவர்க்கு விசேட வகுப்புகள். ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (88567)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள "பெயின்ரிங் கொம்பிறசர்" (அனைத்துப் பாகங்களும் அடங்கியது) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: கரன், காணக்கால் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (88622)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட மொறிஸ் ஒக்ஸ்போர்ட், Rx100 ஜமகா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 36, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P.2472, 3078. (88633)

### தவறிவிட்டது

இத்தாவில் பளையைச் சேர்ந்த காசிப்பிள்ளை தவகுலசிங்கம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 562033050V), விசேட அ.அட்டை என்பன 27.05.2001 அன்று சீரணிச் சந்திக்கும் மாசியப்பிட்டிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீவிநாயகர் புத்தகசாலை (சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்திற்கு அண்மையில்) ஒப்படைத்து உதவவும். (88630)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கஸ்தூரியார் வீதியில், ஆரோக்கிய மாதா கோயிலுக்கு சமீபமாக சிறு தொகைப் பணத்துடன் ஒரு பணப்பை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரத்துடன் 195 A, கஸதூரியார் வீதி என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும். (88645)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய தனிக் கறுப்பு நிற நல்லின நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 617, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (பழைய இல. 373, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.) (88616)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: செல்வம், மங்கள மாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (கால் நடை தீவன விற்பனை நிலையம் அருகில்) (88535)

### கலந்துரையாடல்

கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-10)


**வணிகக் கல்வி**
பகுதி II
A/L 2002
திரு. S.யசோ
MON., THU. 4-5
ஆரம்பம்:
இன்று (04-06-2001) MON. 4p.m.
BEACON
யாழ்நகர் (88649)


# அகவை நான்கைப் பூர்த்தி செய்யும் யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனம்

ஆரம்ப காலத்தில் கிராமிய கைத் தொழில் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கிவரும், தொழில் நுட்பக் கல்லூரிகளின் கீழ் நடத்தப்பட்டுவந்த தேசிய டிப்ளோமா மற்றும் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் அங்கிருந்து பிரிக்கப்பட்டு 1995ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவ கச் சட்டத்தின் கீழ் தனி நிறுவன மாக உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தனி நிறுவனங்களாக யாழ்ப்பாணம், தெஹிவளை, காலி, கண்டி, அம்பாறை, மட்டக்குளி, பதுளை, குருநாகல், நைவெல, லவுகுவ, திருகோணமலை ஆகிய 11 இடங்களிலும் தொழில்நுட்பக் கல்லூரியின் அலகாக அநுராதபுரம், மட்டக்களப்பு, பெலியத்த, களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி, சம்மாந்துறை, வரக்காப்பொல, மருதானை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இந்நிறுவகம் 1996 ஜூன் முதலாம் திகதி திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கக் கட்டடத்தில் தொழில்நுட்பக் கல்லூரியின் அலகாக ஆரம்பிக்கப் பட்டது. இதற்கான பயிற்சி இயக்குநராக (Course Director) ரி.இராஜரட்ணம் 1997 ஒகஸ்டில் நியமிக்கப்பட்டார். பின் 01.09.2001 இலிருந்து இவர் நிரந்தரப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டர். இவரது விடாமுயற்சியும் அர்ப்பணிப்பு மிக்க சேவையும் நிறுவன வளர்ச்சிக்கு சிறந்த அத்திவாரமாக அமைந்தது.

ஆரம்ப காலங்களில் நிறுவனத்துக்குத் தளபாடப் பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை என்பன இருந்தன. இதனைத் தற்போதைய அமைச்சரும் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமெரிக்காவிலும் சிங்கப்பூரிலும் இருந்த காணிச் சொந்தக்காரர்களுடன் தொடர்பு கொண்டு தற்போதைய இடம் வாடகைக்குப் பெறப் பட்டது.

பின்பு இந்த இடத்தில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரு கொட்டகைகள் 9 லட்சம் ரூபா செலவில் அமைச்சரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன. மேலும் நிறுவனத்துக்குத் தேவையான 13 கணிகளும் 40 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் அமைச்சரின் கோரிக்கையின் பேரில் தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதே போன்று நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தி 11 நிரந்தர விரிவுரையாளர்களை நியமிக்க உதவிய பெருமையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சாரும்.

1999 நவம்பர் 15இல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொறியியலும் பௌதிக விஞ்ஞானமும், விவசாயமும் இயற்கை விஞ்ஞானமும், முகாமைத்துவமும் கணக்கியலும் போன்ற 3 பீடங்களை அமைத்து அதன் கீழ் கட்டடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின் பொறியியல், மின்னணுப்பொறியியல், முகாமைத்துவம், கணக்கியல், வியாபாரக் கல்வி, தகவல் தொழில்நுட்பமும் கணனியும், மொழிகள், விவசாயம், மனைப் பொருளியல், விஞ்ஞானம் போன்ற துறைகளை அமைப்பதற்கான உத்தரவை உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரனவால் விடுக்கப்பட்டது. எனினும் இங்கு முகாமைத்துவம், கணக்கியல், வியாபாரக்கல்வி மற்றும் மொழித் துறை சார்ந்த 5 கற்கை நெறிகள் மட்டுமே தற்போது நடைபெற்று வருவது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**வே.ஜீவரூபன்**
**(இடைவரவு விரிவுரையாளர்)**

இந்நிறுவனத்துக்கென இருபாலை வீதியில் 90 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை நிர்வாகத்தினரும் மாணவர்களும் இணைந்து மேற்கொண்டனர். அதன் பயனாக கடந்த ஆண்டில் நான்கு மில்லியன் ரூபாவும், இந்த ஆண்டில் ஏழு மில்லியன் ரூபாவும் திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் நாட்டின் அசாதாரண நிலைமைகளைக் காரணம் காட்டி யுத்த தேவைகளுக்காக இந்நிதி திறைசேரியால் வெட்டி எடுக்கப்பட்டமை பெரும் மனவேதனைக்குரிய நடவடிக்கையாகும்.

1996இல் 180 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் தற்போது 617 மாணவர்களையும் 3 சிரேஷ்ட விரிவுரையாளர்களையும் 2 விரிவுரையாளர்களையும் 10 உதவி விரிவுரையாளர்கள், 55 இடைவரவு விரிவுரையாளர்களையும் தன்னுள் கொண்டு சிறப்பாக இயங்கி வருவதுடன் வருடாந்த மெய்வல்லமைப் போட்டி, சஞ்சிகை வெளியீடுகள் என்பனவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த 4 வருட காலத்தில் நிறுவனத்தின் வியத்தகு வளர்ச்சிக்கு நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணத்தின் விடாமுயற்சியும் விரிவுரையாளர்களது ஆத்ம ரீதியான பங்களிப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினது ஆதரவும் நிறுவனத்தின் வரலாற்றில் பதிக்கப்பட வேண்டியவையாகும்.

எதிர்காலத்தில் எமது நிறுவனத்தில் பொறியியல் விஞ்ஞானத்துறை சார்ந்த கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் நிறுவனத்துக்கு நிரந்தர காணி, கட்டட வசதிகள் செய்துதரப்பட வேண்டும் எனவும் நிர்வாகத்தினராலும் மாணவர்களாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடமும் பணிப்பாளர் நாயகத்தினரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவை அமைச்சரின் காலத்தில் சாத்தியமாகுமிடத்து தமிழ் சமூகம் என்றும் அவருக்கு நன்றியுடையதாக இருக்கும்.

## எதிர்ப்பு

இறைச்சி வியாபாரிகளின் நன்மை கருதி பருத்தித்துறை முனைப்பகுதியில் கொல்களம் ஒன்றை அமைக்க, பருத்தித்துறை நகரசபையினர் எடுத்த முடிவுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதுவரை காலமும் பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் கொல்களம் ஒன்று இல்லாத நிலையிலேயே இறைச்சிக் கடைகள் நடைபெற்று வந்துள்ளன.

இறைச்சி வியாபாரிகளின் சிரமங்களைப்போக்க நகரசபையினர் முனைப பகுதி இடுகாட்டில் கொல்களம் அமைக்க முடிவு செய்தனர். இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (க-15)


வைரவிழாக் காணும்
யாழ்ப்பாண றோட்டறிக்
கழகத்தை வாழ்த்துவதுடன்,
இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க
வருகை தரும்
றோட்டறி மாவட்ட ஆளுநர்
**கிறிஸ் இராஜேந்திரனையும்**
அவருடன் வருகைதரும் றோட்டறிக் கழகத்தின்
மாவட்ட நிர்வாகிகளையும் வருக வருக என
வரவேற்கிறோம்.
இன்ரறக்ட் கழகம்,
யாழ்.மத்திய கல்லூரி.
(88648)



மக்கள் நலன்காக்கும் பிரிவு
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**விண்ணப்பம் கோரல்**
கீழ்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★ தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி
★ ஆங்கில தட்டச்சுப் பயிற்சி
★ தையல் பயிற்சி
★ பூவேலை, ஐசிங், தலையலங்காரப்பயிற்சி
விண்ணப்பங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்பமுடிவு திகதி: 25-06-2001
பாலர் பாடசாலை ஆரம்பமாகி நடைபெறுகிறது.
புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
- நிர்வாகம்.
(88642)



தில்லையம்பதியாள் துணை
இன்று
கோண்டாவில் தில்லையம்பதியில்
**தேர்த்திருவிழா**
ராகம்: காமாஸ் தாளம்:ஆதி
பல்லவி
ஊர்கூடி வடம்பிடித்தே உளம்உருகச்-சித்திரத்
தேர்ஏறி வலம்வந்தாள் தேவி சிவகாமி
(ஊர் கூடி)
அனுபல்லவி
வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி
(ஊர் கூடி)
சரணம்
தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர காளம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர்சொரிய
ஊரின்புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)
புன்னகை புரிந்தருள் பொலிவுறத் தந்தனள்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும்போது
இன்னமுதத் தாயன்பால் என்றும் எமைக்காத்திடுவாள்
(ஊர் கூடி)
ஆக்கம்: அருட்கவிச் செம்மல் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்
பாடியவர்: கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன்



முற்பகல் 9.00 மணிக்கு வசந்தமண்டபப்பூசை
முற்பகல் 10.00 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல்
மங்கள இசை:
இணுவையூர் சாமிநாதன் குழுவினர்
மாவிட்டபுரம் கண்ணன் குழுவினர்
தேர்த்திருவிழா நேரடி அஞ்சல் இன்று காலை 9.00மணி தொடக்கம் 11.00மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும், யாழ் சேவையிலும் ஒலிபரப்பாகும்.
இரவு 7.00 மணிக்கு தெய்வீகப்பேருரை
நிகழ்த்துபவர் சைவப் புலவர் செ.சத்தியதாஸன்
திருக்கோயில் பரிபாலன சபை
விழா உபயகாரர் பாலா வீடியோ
NANTHA Graphics (NG), Nallur.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரறக்ட் கழகங்களின் சகல உறுப்பினர்களுக்குமான அவசர அழைப்பு

யாழ.றோட்டறிக் கழகத்தின் வைரவிழா நிறைவை முன்னிட்டு நாளை (05.06.2001) செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில், சகல இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களையும் காலை 8.30 மணிக்கு தவறாது சமுகமளித்துப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
யாழ்.றோட்டறிக் கழகம்.

(C/16983)

# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

## செல்வி சி.அபிசனா

அராலியைச் சேர்ந்த திரு.திருமதி சிறிகாந்தன் - பற்குணவதி தம்பதியினரின் செல்வப் புதல்வி அபிசனா தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (4.6.2001) திங்கட்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அபிக்குட்டியை லண்டனிலிருக்கும் அன்பு அப்பா, அராலி அம்மா, தாத்தா, அம்மம்மா, சித்திமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தாமார், சித்திமார், அத்தான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ நாகபூஷணியம்மன் அருளால் பல்கலையும் கற்று சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

க.கோபாலசிங்கம் (மாமா)
*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (88653)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தரோடைக் கிராமத்தைச் சேர்ந்தவரும், கந்தரோடைக் கிராம அபிவிருத்திச் சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ. சங்க கந்தரோடைக் கிளைத் தலைவரும், தமிழர் ஆசிரியர் சங்க மானிப்பாய்த் தொகுதிக் கிளையின் முன்னாள் தலைவரும் துடிப்பான சமூக சேவையாளரும், இளைப்பாறிய அதிபருமான

## திரு.தம்பு நடராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்:
ந.சுசீந்திரராசா,
க.இதயம்.

*கற்பக்குனை, கந்தரோடை,*
*சுன்னாகம்.* (88655)

# இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S.)
## மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2001

மேற்படி போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் (09.06.2001) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கலந்துகொள்ள விரும்புவோர் ஸ்ரான்லி வீதி, மணியம் கட்டடத்தில் உள்ள 'RRAN' பணிமனையில் தமது பெயர்களை 07.06.2001ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்வதுடன் அதற்கான சேவைக் கட்டணத்தையும் செலுத்தி அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

இணைப்பாளர்,
*பயிற்சிப்பட்டறை.*

(C/16980)

# கும்பாபிஷேகம்

வலிகாமம் தெற்கு,ஜூன்4

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேக பெருவிழா இம்மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை பகல் 10.53மணிக்கும் 11.40 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவார்.

இம்மாதம் 7ஆம் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகும்.

12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கந்தர்மடம் சிவகுருநாதபீடம் சோமாஸ்கந்தவேல் சுவாமிகள் ஆகியோர் அருளாசியுரை வழங்குவர். (ஐ-152)

# குருநகரில் சேத விவரங்கள் பதிவு

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினால் குருநகரிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டு வருகிறது.

தொழில் செய்வோர் விரம், அரச உத்தியோகம் செய்வோர் விவரம், வீடு பாதிப்பு போன்ற விவரங்களே சேகரிக்கப்பட்டு வருகின்றன.(க-51)

# கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஜூன்4

நலலூர் சயன்ஸ் அக்கடமி மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை கல்விச் சுற்றுலா மேற்கொண்டு, தீவுப பகுதியின் பல இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இந்தச் சுற்றுலாவை மேற்கொள்கின்றனர். (ஐ)

# ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை சுப்றா கல்வி நிறுவன ஆதரவில் 'சுப்றா' வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

ஓல்ட் கோல்ட்ஸ் வி.க.'பி' அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க.'பி' அணி. (ம)

## புலமைப் பரிசில் – 2001 (42)

| | |
|---|---|
| சு.டினேஸ்சாந் (யா.இ.ஆ.பா) | 186 |
| சீ.கேகை (யா.இ.ம.ஆ.பா) | 185 |
| ஆ.ஜதிகானந | 183 |
| வெ.ஜெயப்பிரசாந் (யா.இ.ஆ.பா) | 180 |
| உ.நிவேதிகா | 188 |
| வி.டிலக்ஸன் (சென்.பற்.கல்.) | 176 |
| பு.தபோகசன் (யாழ்.கல்லூரி) | 176 |
| க.கோகுலன் (மகாஜ.கல்.) | 170 |
| ந.சதீஸ்வரன் (கோண்.இராம) | 170 |
| வ.அனுசன (யா.இ.ஆ. பா.) | 170 |
| அ.சுபாங்கி (கொ.இ.ஆ.பா.) | 170 |

கரம் 2,3,4,5 மாதாந்தப் பரீட்சை (05-06-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

BOND - யாழ்நகர் (C/16981)


ராஜா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், குஷ்பு
மற்றும் பலர் நடிப்பில்
சிம்மாசனம்
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
(C/16941)

நாகம்ஸ்
சுன்னாகம்
சத்தியராஜ், குஷ்பு,
கபாலி நடித்த
உன்னைக் கண் தேடுதே
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(88625)


# நெடுந்தீவுக் கடலில் சனியன்று 8 இந்திய மீனவர்கள் கைது!

ஊர்காவற்றுறை,ஜூன்4

இலங்கைக் கடற்பரப்பினுள் மீன் பிடித்துக் கொண்டிருந்த எட்டு இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் நேற்று ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்களின் இரு படகுகளும் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் சேர்த்து கடந்த ஒரு மாத காலத்தில் 47 இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-16-73)

# பிற்போடப்பட்டுள்ளது

'மணீஸ் வெளியீடு' நடத்தும் போட்டிப்பரீட்சை இல.02, 5ஆம் திகதி நடைபெறமாட்டாது. 10-06-2001 ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

(C/16984) - மணீஸ் வெளியீடு

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

வையகம் 04 . 02 . 1932



வானகம் 05 . 05 . 2001

வேலணை மேற்கு அமரர்

உயர்திரு. **பெருமாள் நாகரெத்தினம்**

மெல்லெனப் பேசிநாளும் இன்னல்கள் தீர்த்து வைத்து
இல்லத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அப்பாவே!
எல்லையில் கருணைமிக்க இறைபதம் அடைந்த தன்மை
சொல்லினில் அடங்கற்பாற்றோ சுற்றமே தவிக்குதப்பா!

*425, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி.* (88658)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## விசுவலிங்கம் பஞ்சரெத்தினம்

சோலைவரிப் பஞ்சர் என அன்பாக அழைக்கப்படும் விசுவலிங்கம் பஞ்சரெத்தினம் (ஓய்வு பெற்ற லிகிதர், பொலீஸ் திணைக்களம்) காலமாகிவிட்டார்.

இவர் பவளரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), தங்கம்மா மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சதாசிவம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) மற்றும் சிவமகாதேவி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருபாமூர்த்தி (ஓய்வுபெற்ற வரிமதிப்பீட்டாளர்), இரஞ்சினி, மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனதேவி, பற்குணநாதன் (ஆசிரியர், யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை), திருநாவுக்கரசு (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரது அன்பு மாமனும், பகீரதி, மோகன்ராஜ், ரவீனா, டாஷன், இளமதி, தாரணி, ஜோதினி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 164/10, பஞ்சரத்தினம் வழி, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று (04.06.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (88654)

தகவல்:
க.பற்குணநாதன்
(மருமகன்)

## திருமதி தம்பு வள்ளிப்பிள்ளை

முகமாலை, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பு வள்ளிப்பிள்ளை நேற்று (03.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற லக்சுமி மற்றும் தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி குஞ்சுப்பிள்ளை கந்தையா மற்றும் கணபதிப்பிள்ளை, இராசமணி, மகேஸ்வரி, செல்வராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, பவளராணி, தேவி, கணபதிப்பிள்ளை, சுகந்தன், கமலாதேவி, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தேவி மற்றும் விமலாதேவி, மகேந்திரம், மணிமாலா, யோகமணி, ஸ்ரீதரன், வவா, வவி, ரம்யா, ப்ருந்தா, கிருபாகரன், கலைச்செல்வி, கருணைச்செல்வி, ஜெயராஜ், ரஜீவன், சயூனா, மயூரா, கிருஷாந்தி, அனுசியா, வினோராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2001) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*ஆறுகால்மடம்.* (88657)

தகவல்:
த.சுகந்தன்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர் குடும்பத்தைக் கொன்றவர் இளவரசர் திபேந்திரா தானா?

## அரண்மனை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை

காத்மண்டு,ஜூன்4

நேபாள மன்னர் பிரேந்திரா மற்றும் அவரது குடும்பத்தினரின் படுகொலை தொடர்பாக முரண்பாடான தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

தனது தந்தையான மன்னரையும், தாய் மற்றும் குடும்ப உறுப்பினர்களையும் பட்டத்து இளவரசர் திபேந்திராவே சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றுள்ளதாகவே முதலில் செய்திகள் வெளியாகி இருந்தன.

எனினும் அதனை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தும் எந்த அறிவிப்பும் அரண்மனையில் இருந்து விடுக்கப்படவில்லை.

மன்னர் மற்றும் குடும்பத்தினரது இறுதிச் சடங்கு முடிவடைந்த பின்னர் நேற்று இந்தச் சம்பவம் தொடர்பாக அரண்மனையில் இருந்து அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கையில் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர் யார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

'காத்மண்டு நகரில் உள்ள அரண்மனையில் இயந்திரத் துப்பாக்கி ஒன்று திடீரென்று இயக்கப்பட்டதில் மன்னர் பிரேந்திராவும் ஏனையோரும் உயிரிழந்தனர் என்று மட்டுமே அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால அந்தத் துப்பாக்கியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போது எவருடைய கையில் அது இருந்தது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை -

பரவலாக வெளியாகி இருக்கும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருப்பது போன்று மன்னரையும் ஏனையோரையும் பட்டதது இளவரசர் திபேந்திரா சுட்டுக்கொல்லவில்லை என்று அரண்மனை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் -

ஆபத்தான கட்டத்தில் ஆழ் மயக்க நிலையில் இருக்கும் இளவரசர் திபேந்திராவின் முதுகுப் புறத்தில் சூட்டுக்காயம் காணப்படுவதாகவும் -

அது படுகொலைகள் நிகழ்ந்த விதம் குறித்து பல ஐயங்களைக் கிளப்பிவிட்டிருப்பதாகவும் -

செய்திகள் வெளியாகி உள்ளன. (ஐ-9)

---

## ஜயலத்துக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை

### சர்வதேச அமைப்பு வலியுறுத்து

ஹவானா,ஜூன்4

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என சர்வதேச நாடாளுமன்றங்களின் அமைப்பு இலங்கை அரசிடம் கோரி உள்ளது.

ஜெனீவாவில் இயங்கிவரும் இந்த அமைப்பின் 168ஆவது அமர்வு அண்மையில் ஹவானாவில் இடம் பெற்றது. அந்த அமர்வின்போதே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப் பட்டது.

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட அவர் மீது குற்றம் சாட்டி இருந்தார்.

1998ஆம் ஆண்டு ஜயலத் ஜெயவர்த்தனாவை வன்னிக்கு அழைத்துச் சென்ற வாகனச் சாரதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு 7 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பிரதி அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவால் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுளளது.

இவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச நாடாளுமன்றங்களின் அமைப்பு டாக்டர் ஜயலத்தின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் எனவே அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் இலங்கை அரசைக் கோருவதாகவும் தெரிவித்துள்ளது. (ம-5)

### புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி தனிநபர் பிரேரணை

கொழும்பு,ஜூன்4

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் அமைபபு மீதான தடையை நீக்குமாறு கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் அமைதியைக் கொண்டு வர முடியாது. புலிகளுடன் பேச்சு நடத்துவதாயின் அவர்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்" - என்று தனது பிரேரணை தொடர்பாக நேற்று சபாநாயகரிடம் சமர்ப்பித்த முன்னறிவித்தல் கடிதத்தில் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ)

---

### திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் -

அதனையடுத்தே எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்களைத் தடுக்கும் நோக்கில் அந்த வீதியின் பாதுகாப்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அண்மையில் திருமலை கடற்படைத் தலைமையகத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தலைமையில் முப்படைத் தளபதிகள் நடத்திய உயர் மட்ட மாநாட்டில் இந்த வீதியின் பாதுகாப்புத் தொடர்பாக கூடுதல் கவனமெடுக்குமாறு அறிவுறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

திருமலை அலஸ்தோட்டம் உட்பட அப்பகுதிக் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்றும் அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5-4)

---

### அமைச்சர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதடி மகாவித்தியாலயம், சாவகச்சேரி பொதுச்சந்தை, புத்தூர்ச்சந்தி, கொடிகாமம் சந்தைப் பகுதி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், வரணி, சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலயம் ஆகிய இடங்களுக்குச் சென்ற அமைச்சர் அங்கு கூடியிருந்த மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்ததாக ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கைதடிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஈ.பி.டி.பியின் யாழ். தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

---

### புலிகள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அமைப்பைத் தடை செய்யும் முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதோ நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த உதவப் போவதில்லை' என்றும் அந்த ராஜதந்திரி கூறியிருக்கிறார்.

இதேவேளை -

ஒஸ்லோவில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் அங்கிருந்தவாறே கொழும்புடனும், லண்டனுடனும் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருவதாகவும் -

முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஏதாவது நகர்வுகள், தகவல்கள் எந்தத் தரப்பில் இருந்தாவது கிடைத்தால் அவர் தனது அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கத் தயாராக இருப்பதாகவும் -

சில ஒஸ்லோ வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. (ஐ-20)

---

## புலிகளுக்கு ஆயுதங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமான பகுதியை இந்த நடவடிக்கையில் கடற்படை ஈடுபடுத்தியிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தகவல் வெளியிட்டனர்.

தனது 'வான் கண்காணிப்பு மையத்தை' அநுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு இடமாற்றியிருக்கும் விமானப்படை, இந்த நடவடிக்கையில் கடற்படைக்கு மிக நெருக்கமாக உதவி வருகின்றது.

புலிகளின் படகுகள் நகர்வதைக் கண்காணிப்பதற்கு நோட்டமிடும் பறப்பு நடவடிக்கைகளை விமானப் படை மேற்கொண்டு வருகின்றது. இப்பணியில் 'ஆள் இல்லா உளவு விமானங்களும்' பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய நோட்டமிடும் பறப்பு நடவடிக்கைகள் நாட்டின் கரைகளிலிருந்து சுமார் நூறு முதல் நூற்றி ஐம்பது மைல் தூரம் வரை மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் கடற்படை நடவடிக்கையின் பலன்களை மீள் ஆய்வு செய்வதற்காக இராணுவத் தளபதி லெபடினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி ஆகியோர் கடந்த வியாழன் அன்று திருகோணமலைக்கு சென்றிருந்தனர்.

"படை நடவடிக்கையில் சிறிய சிறிய சிக்கல் எழுந்ததை அடையாளம் காணமுடிந்தது. நாம் அவற்றுக்குத் தீர்வு கண்டுவிட்டோம். இப்போது நடவடிக்கை சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது." - இப்படி கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் சொன்னார்.

"இந்த நடவடிக்கையில் இது வரை நாம் எதிரியை எதிர்கொள்ளவில்லை." - என்று கூறிய அந்த அதிகாரி, "நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து நான்கு அல்லது ஐந்து வாரங்களின் பின்னர் மீளாய்வு செய்யப்படும்" என்று கூறினார்.

### ரத்வத்தை கூறும் விளக்கம்

"இது ஒரு தாக்குதல் நடவடிக்கை அல்ல. எனவே இந்த நடவடிக்கையை எந்தவிதத்திலும் நோர்வேயின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்காது. நாட்டுக்குள் ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுப்பதே இந்த நடவடிக்கையின் ஒரே நோக்கம். இறைமையுடைய ஒரு நாடு என்ற முறையில் தனது கடல் எல்லையை பாதுகாத்து, கடத்தலைத் தடுப்பது நாட்டின் சட்டபூர்வப் பணி" - என்று விளக்கமளித்துள்ளார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த. (உ-5)

---

## பல முனைகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*பதுமன் அனுப்பியுள்ளார். இந்தத் தாக்குதல்கள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

### மட்டக்களப்புப் பிரிவில்

*கருணாவின் தலைமையின் கீழ் புலிகளின் ஏனைய தலைவர்கள், உறுப்பினர்கள் பங்குபற்றும் கூட்டமொன்று ஜூன் 10 ஆம் திகதி தொப்பிகலப் பகுதியில் நடைபெறவுள்ளது என்பதை அவர்களின் தொலைத் தொடர்புகள் தெரிவித்தன. இது கடமையில் இருக்கும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலீஸார் மீது தாக்குதல்கள் நடக்க இருப்பதைக் கட்டியம் கூறுகின்றது.*

*அத்தோடு -*

*மனோ மாஸ்டர், தாத்தா, சச்சு மாஸ்டர் ஆகியோர் தலைமையிலான குழுக்கள் அம்பாறை, மகாஓயா பகுதிகளில் மறைந்திருந்து தாக்குவதற்காகத் தயாராகி வருகின்றன என்பதையும் தொலைத் தொடர்புகள் உறுதிப்படுத்தின.*

*கதிரவெளிப் பகுதித் தலைவா, ஜீவன், ஜீவேந்திரன், தோத்திரன் ஆகியோர் தலைமையிலான குழுக்கள் அடுத்த மூன்று நாள்களுக்குள் தாக்குதல்களை நடத்துவதற்காக மட்டக்களப்பு, வெலிகந்தை, பொலன்நறுவை ஆகியவற்றின் எல்லைப்புறப் பகுதிகளை நோக்கிப் புறப்பட்டிருப்பதாகவும் புலிகளின் தொலைத் தொடர்புகள் தெரிவித்தன.*

### அம்பாறைப் பிரிவில்

*கஞ்சிக்குடிச்சாறுப் பொறுப்பாளர் ராபட், உப பொறுப்பாளர் ஸ்டான்லி மற்றும் சம்பந்தன் ஆகியோர் தலைமையிலான புலிகளின் குழுக்கள் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலீஸார் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பணிக்கப்பட்டிருப்பதாக புலிகளின் தொலைத் தொடர்புகள் தெரிவித்தன. இந்தத் தாக்குதல்கள் அநேகமாக அக்கரைப்பற்று, திருக்கோயில், பொத்துவில், மாந்தோட்டம் ஆகிய பகுதிகளில் இடம்பெறலாம்.*

*அரசுக்கும் ஆயுதப் படைகளுக்கும் எதிராக அடிக்கடி ஆட்சேபப் போராட்டங்களை நடத்தும்படி தமிழ் மக்களை வற்புறுத்துமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவரான கரிகாலன், கஞ்சிக்குடிச்சாறு பிரதேசத்தில் உள்ள காந்தரூபன், அரியதாஸ் ஆகியோரைப் பணித்திருப்பதாகப் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியவந்துள்ளது -*

இவ்வாறு பொலீஸ் அறிக்கை கூறுகின்றது.

வரும் வாரங்களிலும் மாதங்களிலும் - வடக்கிலும் கிழக்கிலும் - தமது தாக்குதல்களைப் புலிகள் தீவிரப்படுத்துவார்கள் என்பதற்கு இவை தெளிவான சமிக்ஞைகளை வெளிப்படுத்துகின்றன.

தலைநகர் மற்றும் பிரதேசங்களின் பாதுகாப்புக் குறித்தும் அதிகாரிகள் சிரத்தை கொண்டு பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை பலப்படுத்தியிருக்கிறார்கள்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடமிருந்து அடுத்த நடவடிக்கை குறித்து தகவல் கிடைக்கும் வரை அரசு காத்திருக்க, மறுபுறத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து கிட்டும் செய்தி மிகத் தெளிவாக உள்ளது. அந்த இயக்கம் மீணடும் போருக்கு வந்துவிட்டது என்பதே அது.

- இப்படி தெரிவித்துள்ளார் இக்பால் அத்தாஸ். (உ)

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
முழுநிலா நாள் கருத்தரங்கு
இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
காலம்:- நாளை 05-06-2001 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)
தலைமை :- Dr.V.யோகேஸ்வரன்
கருத்துரை :- "நாமும் நமது சூழலும்"
வழங்குபவர் :- திரு.க.சி.குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
அனைவரும் வருக!
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
ஆதரவு:- வீடியோ விமல், யாழ்ப்பாணம்
(C/16985)

PERSONAL CLASS
A/L PHYSICS
BY:- T.SHAN (B.Sc.Dip.IN Ed.)
2002
வெப்பவியல் (HEAT)
ஆரம்பம்: 04-06-2001 இன்று
திங்கள் பி.ப.5 மணி
இடம்: 410, K.K.S. வீதி,

## மரண அறிவித்தல்

### Dr.தம்பிஐயா அருமைத்துரை (R.M.O.)

*(பொறுப்பதிகாரி, அரசினர் வைத்தியசாலை - நவாலி; முன்னாள் பொறுப்பதிகாரி, அரசினர் வைத்தியசாலை - சங்கானை; மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழக இரண்டாவது உதவித் தலைவர்)*

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா அருமைத்துரை நேற்று (03-06-2001) ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - அழகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் அரிகரன் (தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை), கபிலா (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜலக்சுமி சின்னத்தம்பி, சிவபாலன், அன்னலக்சுமி, சந்திரபாலன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசிங்கம், பாலரத்தினம், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், தில்லைநாதன் மற்றும் பரமேஸ்வரி, சுந்தரலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் கமலநாதனின் (பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்) சகலனும் மணிமேகலை, உதயமலர், ஜெயா, காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் கபிலன், கஸ்தூரி, கஜீபன், சானுஜன், சாதுகன், கஜாணன் ஆகியோரின் பெரிய தந்தையும் சுதர்சன், சுபாஸ், சுபாசினி, யதீஸ், யாழினி, விலாசித்தா, பாபு, கார்த்திக், சிந்து, சதாயினி, பார்த்தீபன், சோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-06-2001) திங்கள் பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(C/16987)

தகவல்:
அ.அரிகரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org